

# சுயசார்பு பாரதத்தின் சிற்பி

சிறப்பு வெளியீடு...




**Dr.R.G.ஆனந்த்**
உறுப்பினர் - தேசிய குழந்தைகள்
உரிமை பாதுகாப்பு ஆணையம்
இந்திய அரசு

**கார்த்திக் திருநாராயன்**
இயக்குனர் - ஆரக்கல் இந்தியா

**R.S.மோகன்ராஜ்**
மாநில செயற்குழு உறுப்பினர் (EX)
தமிழக பாஜக இளைஞர் அணி



# உள்ளடக்கங்கள்

நன்றியுரை.......... 4

முகவுரை.......... 6

1. ஏழை மக்களின் ஒரு மகனாக:.......... 8

2. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஒரு அக்கறையுள்ள தந்தையாக:.......... 12

3. இளம் தலைமுறையினருக்கான வழிகாட்டி.......... 16

புதிய கல்விக் கொள்கை (NEP).......... 18

பணிக்கு ஆட்சேர்ப்புக்கான தேசிய முகமை (National Recruitment Agency).......... 20

வேலையின்மைக்கான அலவன்ஸ் (கொடுப்பனவு) – அடல் பிமித் வயாக்தி கல்யான் யோஜனா.......... 22

திறன் இந்தியா – பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா (PMKVY).......... 23

தொடக்க (ஸ்டார்ட்அப்) இந்தியா.......... 25

தேசிய தொழில்முனைவோர் விருதுகள்.......... 27

விளையாடு (கேலோ) இந்தியா (Khelo India).......... 28

4. ஒரு தேசப்பற்றுமிக்க வீரராக.......... 30

5. ஒரு அர்ப்பணிப்பு கொண்ட தொண்டராக.......... 37

6. ஒரு சீர்திருத்தவாதியாக ........ 41

கோவிட்–19 தொற்று பரவலிலிருந்து உயிர்ப்புடன் மீண்டெழும் நம் பாரத தேசம் ........ 43

ஆரம்ப நடவடிக்கைகள் ........ 44

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ........ 46

இதன் வகையில் முதல் முன்முயற்சிகள் ........ 49

சீர்திருத்தங்களின் மூலம் ஆக்கப்பூர்வ மாற்றமும், முன்னேற்றமும் ........ 54

7. இந்தியாவின் சர்வதேச தலைவர் ........ 58

முடிவுரை ........ 66





# சுய சார்புள்ள பாரதத்தை

# உருவாக்கும் சிற்பி

# நன்றியுரை

பாரதத்தின் முதல் மக்கள் பிரதமராகிய மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்கள் தனது 70–வது பிறந்த நாளை செப்டம்பர் 17, 2020 அன்று கொண்டாடுகிறார். நாம் பொறுப்புள்ள குடிமகன் என்ற வகையில் அவருடைய பிறந்தநாளை ஒரு திருவிழா போன்று கொண்டாட வேண்டும். ஆமாம், நிச்சயமாக. திருவிழாக்களும், பண்டிகைகளும் மகிழ்ச்சியையும், பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலையும் கொடுத்து, செழுமைக்கும் வழிவகுக்கின்றன. நம் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்கள், தனது அர்ப்பணிப்பு, திறன்மிக்க செயல்பாடு, தேசநலனின் மீது கூர்நோக்கம் ஆகியவற்றின் மூலம் ஒட்டுமொத்த நாட்டிற்கும் மகிழ்ச்சியையும், செழுமையையும், பாதுகாப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

அவருடைய பிறந்த நாளில் 130 கோடி மக்களுக்கும் ஒரு அன்பளிப்பு பரிசு வழங்கப்படுவது முற்றிலும் பொருத்தமானது. முன்முயற்சிகள், சவால்கள் மற்றும் மாற்றம் குறித்த ஒவ்வொரு படிநிலையிலும் நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு ஆதரவளித்து வரும் பாரதத்தின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அன்பளிப்பு பரிசாக இந்த நூலை எழுத வேண்டும் என்ற உந்துதல் எனக்கு ஏற்பட்டது.

மகத்தான நம் நாட்டிற்கு நம் மாண்புமிகு பிரதமர் எடுத்த பல்வேறு முயற்சிகள் மற்றும் ஆற்றிய சேவைகள் மத்திய அரசு அமைச்சகங்களின் வலைதளங்கள் மற்றும் இணைய ஊடகங்களிலிருந்துதேர்வு செய்யப்பட்டு, தொகுத்தளிக்கப்பட்டிருக்கின்றன.மாண்புமிகு நம் பிரதமர் அவர்கள் அளித்துள்ள பங்களிப்பை நம் பெருமைமிகு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் புரிந்துகொள்வதை உறுதிசெய்வதே இதன் நோக்கமாகும்.இதுபோன்ற ஒரு தேசபக்தியுள்ள மகனை ஈன்றெடுத்து நம் பாரத தாய்க்கு அர்ப்பணித்ததற்காக நம் **மாண்புமிகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் தாயார் மதிப்பிற்குரிய ஹிராபென் மோடிஜி** அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

இந்த நூலை எழுதுவதற்கு எனக்கு ஊக்கமளித்த **டாக்டர். R.G. ஆனந்த் மற்றும் திரு. மோகன்ராஜ்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி. வெளிப்படையாக சொல்வதென்றால், இந்த நூல் உருவாக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் அவர்கள் தந்த ஊக்கமும், ஆதரவும் போற்றுதலுக்குரியது.







## முகவுரை

**பாரதம்** – கலாச்சாரம், பாரம்பரியம், மரியாதை, மனித மதிப்பீடுகள், அறிவியல், சுகாதாரம், தொழில்நுட்பம், வணிகம், பொருளாதாரம் மற்றும் கல்வியின் பிறப்பிடமாக விளங்கும் ஒரு பெருமைமிகு தேசம்

**"சொர்க்கத்தை விட தாயும், தாய்நாடும் சிறந்தது"** என்று இராமாயணத்தில் பகவான் இராமர், லக்ஷ்மணனிடம் கூறினார்.

தாய்நாட்டின் மகிமை &பங்களிப்பு பற்றி ஒருவருக்கு தெரிந்தால் மட்டுமே தேசபக்தி அவரிடம் வளர்ந்து செழிக்கும்.பாரதத்தின் குறிப்பிடத்தக்க முனைப்புத்திட்டங்கள், முன்னெடுப்புகள், சாதனைகள், எட்டப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி, பல்வேறு துறைகளில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்கள்,நாட்டின் பாதுகாப்பையும், இறையாண்மையையும் உறுதி செய்வதற்கான வலுவான நடவடிக்கைகள் மற்றும் இதில் நமது பாரதப் பிரதமர் மோடி அவர்களின் தலைமையில் இயங்கும் அவரது அரசின் பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வும், தகவலறிவும் குடிமக்கள் ஒவ்வொருவரின் தேசபக்தியை வளர்த்துக்கொள்ள உதவும் சக்தியுடனும், பேரார்வத்துடனும் **"சுய நிறைவுள்ள பாரதத்தை"** உருவாக்கவும்,தேச வளர்ச்சியில் பங்கேற்கவும் செய்யும்.

ஒரு சாதாரண நபருக்கும் மற்றும் ஒரு பிரத்யேகமான நபருக்கும் இடையே உள்ள வேறுபாடு எதில் இருக்கிறது என்றால், அது அவருடைய சிந்திக்கும் திறன், சாதிக்க வேண்டும் என்ற பேரார்வம் மற்றும் உறுதிப்பாட்டில் இருக்கிறது. **நாட்டின் வளர்ச்சி &தேசமே முழுமுதல் முக்கியம் என்பது,தனித்துவ சிறப்புடன் திகழும் நமது மாண்புமிகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் குறிக்கோள் இலக்காகும்.**

நம் குடும்பத்தில் உள்ள யாரேனும் ஒருவர் ஏதும் நல்லதை செய்யும்போது அல்லது சாதிக்கும்போது, நம்முடைய உறவினர் மற்றும் நண்பர்களுடன் கொண்டாடுவதும், மகிழ்ச்சியோடு அதனை பகிர்ந்து கொள்வதும் நமது இயல்பு. நம்முடைய பெருமைமிகு நாட்டின் 130 கோடி மக்களை தன்னுடைய சொந்த குடும்பமாக ஏற்று பொறுப்புறுதியுடன் அதை வழிநடத்துகிற ஒரு உன்னதமான தேசபக்தரை பிரதமராக நாம் பெற்றிருப்பது இந்த நாட்டின் தவப்பயனாகும்.

நம்முடையதைப் போன்ற ஒரு பெருமைமிகு நாட்டின் ஒரு பிரதமர் என்பவர், நமது தேச ஆற்றலைப் பற்றி பெருமையுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு தேசபக்தியுடையவராக, பற்றுணர்வுடையவராக, உறுதியுடையவராக, அர்ப்பணிப்புடையவராக, வீரமுடையவராக, தைரியமுடையவராக, தொலைநோக்குடையவராக மற்றும் மக்கள்

நலனில் அக்கறையுடையவராக இருக்கவேண்டும். நமது நாட்டின் முன்னாள் பிரதமர் காலம் சென்ற அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களுக்குப் பிறகு, இந்த அனைத்து நற்பண்புகளையும் நம் மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களிடம் அபரிமிதமாக இருப்பதை நான் காண்கிறேன்.

ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் தனது 19 ஆண்டுகள் பொது சேவைகளில் (குஜராத் மாநிலத்தின் முதல்வராக 13 ஆண்டுகள் மற்றும் பாரதப் பிரதமராக 6 ஆண்டுகள்) நம் பெருமைமிகு நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக கடந்த 6950 +நாட்கள் மற்றும் 1,25,100 +மணி நேரங்கள் தொடர்ந்து சேவையாற்றி வரும் மற்றும் சாமான்ய மக்களுக்காக அதிகபட்ச நல நடவடிக்கைகளை எடுத்து வரும் முதன்மை நபராக திகழ்கிறார் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க இயலாது.

இந்திய பிரதமராக பொறுப்பேற்பதற்கு முன்பு, ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 13 ஆண்டுகள் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார்.அவர்,முதலமைச்சருக்கான தனது முழு ஊதியம் மற்றும் அவருக்கு அன்பளிப்பு பரிசுகளாக கிடைத்த அனைத்தையும் ஏலத்தில் விட்டு,அதில் கிடைத்த முழு பணத்தையும் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் நலனுக்கு அன்பளிப்பாக வழங்கியவர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

**“மான் கி பாத்”** நிகழ்ச்சியின் மூலம் ஒவ்வொரு மாதமும் நமது தேசத்தின், அரசின் மற்றும் மிகச்சிறந்த குடிமக்களின் சாதனைகளை 130 கோடி மக்களோடு, மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி பகிர்ந்து கொள்கிறார்.

பெருமைமிகு இந்தியா – ஒவ்வொரு இந்தியரையும் பெருமையாக உணரவைத்த பிரதமர்.

**கார்த்திக் திருநாராயணன்**

# ஏழை மக்களின் ஒரு மகனாக



# 1. ஏழை மக்களின் ஒரு மகனாக

சுதந்திரத்திற்குப் பிறகு, நம் நாட்டிற்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு மாற்றம் ஏற்படும் என்று பெரும் எதிர்பார்ப்புகள் இருந்தது.ஏழை மக்களுக்கு ஆற்றல் பெறச் செய்தல், அதிகாரமளித்தல் என்பது அரசியல்வாதிகளால் வெறும் ஒரு கனவாகவே வைக்கப்பட்டது.ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் தங்கள் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களை மட்டுமே ஆற்றல், அதிகாரம் பெறச் செய்தனர்.ஒவ்வொரு ஏழையின் கடினமான உழைப்பு, அவனுடைய சம்பாத்தியம், அவனுடைய எதிர்காலம், அவனுடைய லட்சியம் ஆகிய அனைத்தும் வெறும் காகிதத்தில், எழுத்தில் மட்டுமே இருந்தது.செயல் வடிவத்தில் இல்லை.

ஒரு ஏழை, ஏழையாகவே தொடர்ந்து வைக்கப்பட்டான்.ஏனெனில், அவனுக்கு சேரவேண்டிய நலன்கள் பிறரால் கொள்ளையடிக்கப்பட்டன, வளர்ச்சி அழிக்கப்பட்டது, ஆதரவு நிறுத்தப்பட்டது.இது பல தசாப்தங்களுக்கு தொடர்ந்தது. சாமான்ய மக்களின் எதிர்பார்ப்பும், விருப்பங்களும் நிராசைகளாகவே ஆகிவிட்டன. அந்த மக்களின் நலனும், அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சியும், நோய்வாய்பட்டு,தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தது.நம் நாட்டு ஏழைகளில் 40 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு வங்கி கணக்கு கூட இல்லாத சோகம் தொடர்ந்து நீடித்தது.

**விவசாயிகள்**தான் நமது நாட்டின் உயிர்நாடி.வேளாண்மையே இந்திய மக்கள்தொகையில் 58% பேருக்கு முதன்மை வாழ்வாதாரமாகும்.மேற்கொள்ளப்பட்ட ஒரு வேளாண் கணக்கெடுப்பின்படி, 2 ஹெக்டேருக்கும் குறைவான சிறிய மற்றும் குறு அளவிலான நிலங்கள்,பயிரிடப்படும் மொத்த விவசாய நிலங்களில் 85 சதவிகிதமாகும்.

ஏழை விவசாயிகள் பல சவால்களையும். பருவநிலை பாதிப்புகளையும், விளைபொருட்கள் விலையில் சரிவுகளையும் தொடர்ந்து எதிர்கொண்டனர்.இது அவர்களுடைய அன்றாட வாழ்க்கையையே கடுமையாக பாதித்தது.ஏழை விவசாயிகளின் கடின உழைப்பு இடைத்தரகர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

கிராமப்புற வளர்ச்சி மீது பல தசாப்தங்களுக்கு உரிய அக்கறையும், கவனமும் செலுத்தப்படவில்லை மற்றும் கிராமங்கள், தன்னிறைவுக்கான மாற்றத்தை பெறமுடியவில்லை.

குறைந்த செலவில் சுகாதார பராமரிப்பு என்பது, ஏழை மக்களின் மிகவும் முக்கிய தேவைகளில் ஒன்றாகும். பெரும்பாலான மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் அடிப்படை சுகாதார பராமரிப்பு அமைப்புகளுக்கு அனுகுவசதி இல்லாத நிலை இருந்தது. **“குறைந்த செலவில் சுகாதார வசதிகள்”** இல்லாத காரணத்தால் பலர், குறிப்பாக ஏழை மக்கள்,பெண்கள் இறக்கும் நிலை தொடர்ந்தது.இந்திய சுகாதார பராமரிப்பு அமைப்பு முறையில் ஏழைகளுக்கு சுகாதார சிகிச்சை தருவதற்குசிறந்த நிர்வாகம் இல்லாத துயரம் நீடித்தது.



பல ஏழை குடும்பங்களுக்கு தீவிர சுகாதார பராமரிப்பு வசதிகளைப் பெறுவதற்கு வாய்ப்போ, வசதியோ கிடைப்பதில்லை மற்றும் அதிக மருத்துவ செலவுகள் அவர்களுடைய ஏழ்மையை மேலும் மோசமாக்குகின்றன.

ஒட்டுமொத்தமாக, நல்ல ஆளுகைத்திறனும், நிர்வாகமும் இல்லாதது ஏழை மக்களின் வாழ்க்கையை பெரிதும் பாதித்துள்ளது.இதற்கு ஒரு மாற்றம் தேவைப்படுகிறது.நமது தேசம் இன்னும் அதிக வளர்ச்சி காணவேண்டும், அதற்கு ஏழை மக்களுக்கு முன்னேற்றம் காண ஆற்றல் அதிகாரம் தேவைப்படுகிறது.

### மே 2014:

**"ஏழை மக்களின் தவப்புதல்வன்"** ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 2014ம் ஆண்டு 26 அன்று பிரதமராக ஆனதை ஏழை மக்கள் பார்த்ததும் அவர்களின் கனவு நினைவானது. ஒரு தேசபக்தியுடைய ஏழை தாயின் நேர்மையான மகன்.

நம் மாண்புமிகு பிரதமர் முதல்முறையாக குஜராத் மாநில முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது அது என்றும் மறவாமல் நினைவில் கொள்வதற்குரிய அவருடைய தாயாரைப் பார்க்க அவர் சென்றபோது, 'பார் மகனே, நீ என்ன செய்கிறாய் என்பது எனக்குப் புரியவில்லை, ஆனால் நீ ஒருபோதும் லஞ்சம் பெற மாட்டேன் என்று எனக்கு உறுதிமொழி கொடு – அந்தப் பாவத்தை ஒருபோதும் புரியாதே' என்று அவருடைய தாயார் அறிவுரை கூறினார். லஞ்சம் பெறுவது என்பது ஒரு பாவச்செயலாகும், அதுபோன்ற செயலில் அவர் ஈடுபடக்கூடாது என்று ஸ்ரீ நரேந்திர மோடியிடம், மிகவும் குறைந்த பொருள் வசதிகளுடன் ஏழ்மையில் எப்போதும் வாழ்ந்த ஒரு உன்னத தாய் கூறினார்.

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி, அவர் கொடுத்த உறுதிமொழியை காப்பாற்றுவதில் எப்போதும் உறுதியாக இருந்தார் மற்றும் அவரது வாழ்க்கை முழுவதும் கொடுத்த உறுதிமொழியிலிருந்து பிறழாமல் இருந்தார்.

2014 மே 20ம் தேதியன்று பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட நரேந்திர மோடி அவர்கள் நாடாளுமன்றத்தின் மத்திய கூடத்தில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க உரையாற்றினார்.

**'NDA அரசாங்கம் ஏழைகளின், ஏழைகளால் ஆளப்படும் மற்றும் ஏழைகளுக்கான அரசாங்கமாக இருக்கும். சுருங்கச் சொல்வதென்றால், NDA அரசாங்கம் ஏழைகளுக்கு அர்ப்பணிக்கப்படும்"**

நல்ல ஆளுமையை கொடுப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வள ஆதாரங்கள் ஏழைகளின் நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி நம்பினார்.



- இலவச சுகாதார பராமரிப்பு பெறுவதற்கு 50 கோடி ஏழைமக்கள் பதிவுசெய்து கொண்டுள்ளனர்
- 40 கோடி மக்கள் வங்கி கணக்குகளை பெறுவார்கள்
- 25 கோடி ஏழைமக்கள் சிறுதொழில் கடன்கள் பெற்றுள்ளனர் (முத்ரா திட்டம்)
- 19 கோடி மக்கள் விபத்து **&** ஆயுள் காப்பீடின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளனர்
- 8 கோடி ஏழைப் பெண்கள் இலவச எல்பிஜி சிலிண்டர் இணைப்புப் பயனடைந்துள்ளனர்
- 10.9 கோடி ஏழைப் பெண்கள் கழிப்பறைகள் வசதிக்கு அணுக்கம் பெறுவார்கள்
- 22.4 கோடி ஏழை விவசாயிகள் இலவச மண்வள அட்டை பெறுவார்கள்
- 10 கோடி ஏழை விவசாயிகள் நிதி திறனதிகாரமளிப்பிலிருந்து பயனடைந்துள்ளனர்
- 5.8 கோடி ஏழை விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளனர்
- ஏழைகளுக்காக 6587 மலிவு விலை மருந்து கடைகள்
- 18600 கிராமங்கள் மின்சார வசதி பெற்றுள்ளன
- 1,93,000 கிமீ தூரத்திற்கு ஊரக சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன
- ஏழைகளுக்காக 1.5 கோடி வீடுகள் கட்டப்பட்டுள்ளன

ஏழை மக்களுக்கு திறனதிகாரமளித்தல் என்ற மேற்கண்ட 60 ஆண்டுகள் கனவு வெறும் 6 ஆண்டுகளில் நிஜமாக்கப்பட்டுள்ளது. இதற்கு பேரார்வம், தேசப்பற்று மற்றும் நாடே முழு முதலானது என்ற மனப்பான்மை கொண்ட ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களை நம் நாடு தலைமகனாகப் பெற்றதே காரணமாகும்.

# குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஒரு அக்கறையுள்ள தந்தையாக



# உ. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஒரு அக்கறையுள்ள தந்தையாக

குழந்தைகளேநமது பாரதத்தின் எதிர்காலம். அவர்கள் குழந்தை பாதுகாப்பு, குழந்தை திருமணம் மற்றும் குழந்தை தொழிலாளர்முறை ஒழிப்பு, குழந்தை பிழைப்பு, பச்சிளங்குழந்தை இறப்பு மற்றும் வளர்ச்சியின்மை தடுப்பு, திறந்த வெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழித்தல்; மற்றும் தரமான கல்வி வழங்குதல். பல தசாப்தங்களாக அத்தகைய கவனம் செலுத்த வேண்டியவைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படவில்லை.

நீதி பரிபாலனம் சார்ந்த மற்றும் நிர்வாக ரீதியான கூர்நோக்கம் இல்லாத காரணத்தால் வசதியற்ற சாமானியர்கள் மற்றும் விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் குறிப்பாக பெண்கள் அதிக பாதிப்புக்கு ஆளாகி வந்தனர். குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோக நிகழ்வுகள் நிகழாமல் தடுக்கவும் மற்றும் அக்குற்றவாளிகளை கடுமையாக தண்டிப்பதற்கும் ஒரு வலுவான,கண்டிப்பான சட்டம் அவசியமாக இருந்தது.

பெண்கள் நாட்டின் முதுகெலும்பு மற்றும் பாரத வளர்ச்சித் தூண்கள் ஆவார்கள். ஆனால் அவர்களுடைய அதிகாரமளிப்பு எப்போதும் குறைந்த முக்கியத்துவத்துடன் மிகவும் மெதுவான வேகத்தில் நகர்கிறது.

இந்தியாவில் போதிய கழிப்பறைகள் இல்லாத காரணத்தால் பல பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். உண்மையிலேயே, குறிப்பாக ஊரகப் பகுதிகளில், கழிப்பறைகள் இல்லாத காரணத்தால் பல பெண்கள் பள்ளிகளிலிருந்து படிப்பை தொடராமல் பாதியிலேயே நின்றுவிடுகின்றனர். 56%ற்கு மேற்பட்ட இந்தியர்களுக்கு அடிப்படை துப்புரவு வசதிக்கு அணுக்கம் இல்லை என்று சர்வதேச தொண்டு அமைப்பின் ஒரு அறிக்கை கூறுகிறது.

இந்தியா ஒரு திறமை நிறைந்த நாடு. கோடிக்கணக்கான மக்கள், குறிப்பாக பெண்கள் சிறிய தொழில்முனைவோர்களாக ஆவதற்கு திறமையுள்ளவர்கள். ஆனால் இந்த சிறிய தொழில்முனைவோர்கள் இயல்பான வழிமுறை மூலம் நிதி கடன்கள் பெறுவதற்கு சிரமப்படுகின்றனர். இதனால் இவர்கள் மிகவும் அதிக வட்டி வீதத்தில் சந்தையிலிருந்து வெகுவாக பணம் கடன் வாங்குகின்றனர்.

இந்தியாவில் 24 கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் உள்ளனர், இவர்களில் ஏறக்குறைய 10 கோடி குடும்பத்தினருக்கு சமையல் எரிபொருளாக எல்பிஜி இன்னும் கொடுக்கப்படவில்லை. இவர்கள் முக்கிய சமையல் ஆதாரமாக விறகு, கரி, வறட்டி முதலியனவற்றை சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. சுத்தமற்ற எரிபொருளிலிருந்து பெண்களால் உட்சுவாசிக்கப்படும் புகை ஒரு மணிநேரத்தில் 400 சிகரெட்டுகள் எரிவதற்கு சரிநிகராகும்.

மாண்புமிகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி – ஒரு அக்கறையுள்ள தந்தையாக, ஒரு புதிய பாதுகாப்பு முன்னுதாரணத்தின் மூலம் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஆற்றலதிகாரமளித்திருக்கிறார். ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் தன்னுடைய 13 ஆண்டு முதலமைச்சர் சம்பளம் மற்றும் அவருடைய அனைத்து அன்பளிப்புப் பரிசுகளை பெண் குழந்தைகளின் நலனுக்காக நன்கொடையாக வழங்கியுள்ளார். கடந்த பல தசாப்தங்களில் இத்தகைய அன்பு உள்ளம் கொண்ட ஒரு மாமனிதரை நாடு இதுவரை கண்டதில்லை.

மோடி அரசாங்கம், பெண்கள் பிரச்சனைகளை கவனிப்பதற்கு உடல்தன்மைக்கு அப்பால் சென்று பாதுகாப்பு கூறுகள் குறித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு விரிவான திட்டத்தில் விஷயங்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் பற்றிய மேலும் முழுமையான ஆய்வு எடுத்தது.

தாய் மற்றும் குழந்தையின் உடல்நல பாதுகாப்பு

சமூக பாதுகாப்பு & அதிகாரமளித்தல்

நிதி பாதுகாப்பு & அதிகாரமளித்தல்

பெண் குழந்தையின் பாதுகாப்பு எதிர்காலம்

பெண் பாதுகாப்பு

## குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த முன்முயற்சிகள்:

| விவரணம் | முன்முயற்சிகள் |
|---|---|
| **தாய் மற்றும் குழந்தையின் உடல்நலத்தைப் பாதுகாத்தல்** | பிரசவ விடுப்பு 12 வாரங்களிலிருந்து 26 வாரங்களுக்கு அதிகரிக்கப்பட்டது. 50க்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ள பணியிடங்களில் கட்டாய குழந்தை பராமரிப்பு வசதி.<br>● கர்ப்பமான பெண்களுக்கு இலவச உடல்நல பரிசோதனை (1.7 கோடி பெண்கள் பயன்பெற்றுள்ளனர்)<br>● பிரசவ இறப்பு வீதத்தில் 22% என்ற குறிப்பிடத்தக்க அளவு குறைவு.<br>● ஏழை கர்ப்ப பெண்களுக்கு நிதியுதவி<br>● தேசிய ஊட்டச்சத்து பணித்திட்டம்<br>● இந்திராதனுஷ் பணித்திட்டம் (கர்ப்பமான பெண்களுக்கு; தடுப்பூசி – 86 லட்சம் பெண்கள் & 3.3 கோடி குழந்தைகள் |





| | |
|---|---|
| | ● பிரதம மந்திரி பாரதிய ஜனாஷ்தி பரியோஜனா (PMBJP) ஒரு பேட் ரூ. 1 வீதம் சானிட்டரி பேட்கள் விற்கப்பட்டன (5 கோடி பேர் பயன்பெற்றனர்) |
| **சமூக பாதுகாப்பு & திறனதிகாரமளித்தல்** | ● ஸ்வச் வித்யாலயா (அரசாங்க பள்ளிகளில் உள்ள பெண்களுக்கு 4.7 லட்சம் கழிப்பறைகள் நாடுமுழுவதும் பள்ளிக்கூடங்களில் பெண்களுக்கு தனி கழிப்பறைகள்)<br>● மூன்று தலாக் சட்டம்<br>● அனைவருக்கும் வீட்டுவசத<br>● உஜ்வாலா திட்டம் (8 கோடி ஏழை பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு) |
| **நிதி பாதுகாப்பு & திறனதிகாரமளித்தல்** | ● முத்ரா கடன்கள் (17 கோடி பெண் பயனாளிகள்)<br>● நிமிர்ந்து நில் இந்தியா (SC/ST& பெண் தொழில்முனைவோர்களுக்கான திட்டம் – 68,930 பேர் பயன்பெற்றனர்)<br>● பெண் குழந்தைகளுக்கான சேமிப்பு திட்ட கணக்கு (1.4 கோடி கணக்குகள் தொடங்கப்பட்டன)<br>● வங்கி கணக்கு (ஜன் தன்) – பெண்கள் பெயரில் 19 கோடி கணக்குகள் தொடங்கப்பட்டன<br>● பெண்கள் சுய உதவி குழுக்கள்<br>(2011 – 2014) 5 லட்சம் SHG<br>(2014 – 2018 ) 20 லட்சம் SHG |
| **குழந்தையின் எதிர்காலத்தை பாதுகாத்தல்** | ● மகளை கற்பிக்க மகளை காப்பாற்று (Beti Bachao Beti Padhao)<br>● பிரகதி திட்டம் (பெண் குழந்தைக்கு உதவித்தொகை). 2 ஆண்டுகளில் ஏறக்குறைய 5000 பெண்கள் பயன்பெற்றனர |
| **குழந்தை மற்றும் பெண்களுக்கு பாதுகாப்பு** | ● கற்பழிப்பிற்கு மரணம் (12 வயதிற்குட்பட்ட குழந்தைகள்<br>● ஆட்கடத்தல் எதிர்ப்பு சட்டம்<br>● பெண்கள் தொடர்பான துன்புறுத்தலுக்கு ஆன்லைன் புகார் தளம்<br>● பெண்கள் காவல் தன்னார்வலர்கள் & பெண்கள் பாதுகாப்பு குறித்த செயலிகள் |

# இளம் தலைமுறையினருக்கான வழிகாட்டி



# 3. இளம் தலைமுறையினருக்கான வழிகாட்டி

பாரதம் – கலாச்சாரம், பாரம்பரியம், மரியாதை, மானுட மதிப்பீடுகள், அறிவியல், உடல்நல பராமரிப்பு, தொழில்நுட்பம், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கல்வி உட்பட பல்வேறு துறைகளில் மேலோங்கி அவைகளின் தாயகமாகவும் திகழ்ந்த பெருமைமிகு தேசமிது. உலகின் பல இடங்களில் கல்விக்கூடங்களே இல்லாத, காலகட்டத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தக்ஷஷீலா, நாளந்தா, மிதிலா, டெல்ஹாரா, சாரதா, விக்ரமஷீலா, வல்லபி, சோமபிரா மற்றும் காஞ்சி ஆகிய நகரங்களில் பாரதத்தின் மிகப்பிரபலமான பல்கலைக்கழகங்கள்,“இளைஞர்களுக்கு திறனதிகாரம் வழங்கும் மையங்களாக” செயல்பட்டன. உலகம் முழுவதற்குமே இவைகள் வழிகாட்டின.

நமது மாபெரும் நாட்டின் ஆணிவேர்களாக இளைஞர்களே இருக்கின்றனர் அவர்களது அர்ப்பணிப்பு உணர்வும், பொறுப்புறுதியும் நமது தேசத்தை கட்டமைப்பதற்கு மிகப்பெரிய அளவில் பங்களிப்பை செய்திருக்கின்றன. மாபெரும் வீரரான சத்ரபதி சிவாஜி மகாராஜா, சுவாமி விவேகானந்தர், வீர் சாவர்க்கர், கேசவ் பாலிராம் ஹெட்கவார், சுபாஷ் சந்திர போஸ் என்ற நேதாஜி, மகாகவி பாரதியார் மற்றும் திருப்பூர் குமரன் போன்ற முன்னோடிகள் இளைஞர்களுக்கு ஆதர்ஷ புருஷர்களாக இருந்து வருகின்றனர். தங்களது சுயநலமற்ற பணிகள் மற்றும் வாழ்க்கை வழிமுறைகளின் மூலம் நமது தேசத்தை உருவாக்க அவர்களது இளமை வாழ்க்கையையும் மற்றும் உயிர்களையும் தியாகம் செய்த பெருமக்களாக இவர்கள் போற்றப்பெறுகின்றனர்.

இந்தியாவில் இளம் தலைமுறையினர், நமது மக்கள் தொகையில் அதிக துடிப்பான மற்றும் உயிரோட்டமுள்ள பிரிவினரின் பிரதிநிதிகளாக திகழ்கின்றனர். வயது முதிர்ச்சியடைந்து வரும் பணியாளர்களைக் கொண்டு செயலாற்ற வேண்டிய கட்டாயத்தை பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகள் எதிர்கொள்கின்ற நிலையில், உலகின் மிகப்பெரிய இளம் தலைமுறையினர் எண்ணிக்கையை நமது தேசம் கொண்டிருக்கிறது. வளர்ச்சிக்கும், சுயவேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அதிகாரமளிக்கும் திறன்களை ஏதுவாக்கவும், திறன்மிக்க இளம் தலைமுறையினருக்கு ஸ்டார்ட்அப் செயல்தளத்தை ஏதுவாக்கவும் மற்றும் திறமையான, புத்தாக்கமான செயல்வீரர்களை உருவாக்குவதற்கான ஒரு தளத்தை அமைத்துத் தரவும் இந்தியாவின் திறமையாளர்களது இந்த பெரும்திரள் ஒரு மிகச்சிறந்த வாய்ப்பை வழங்கவிருக்கிறது.

நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் ஒரு பொறுப்புள்ள குடிமகனுக்கு / குடிமகளுக்கு “பேரார்வமும் தேசப்பற்றும்”அவசியமாக இருக்கிறது. ஆனால், தேசம் வலுவான வளர்ச்சியும், திறனதிகாரமும் பெறுமாறு செய்வதற்கு அர்ப்பணிப்பு உணர்வு, பொறுப்புறுதி, தேசபக்தி மற்றும் மனஉறுதிப்பாட்டை உலகறிய வெளிப்படுத்துவதற்கான அவசியம் ஒரு பொறுப்புள்ள தலைவருக்கு இருக்கிறது. மக்களின் பிரதம அமைச்சரான

திரு. நரேந்திர மோடி அவர்கள் "யுவசக்தி பாரத் / இளைஞரின் பேராற்றல் மிக்க பாரதம்" என்ற நமது நாட்டின் பலத்தையும், சாதிக்கும் திறனையும் இந்த முழு உலகமுமே கண்டுணருமாறு செய்திருக்கிறார்.

நமது நாடு சுதந்திரமடைந்ததற்குப் பிறகு முதன்முறையாக மேற்கண்ட பண்பியல்புகளை கொண்டவர்களாக நம் இளம் தலைமுறையினர் திகழ்வதற்காக மற்றும் "ஒட்டுமொத்த உலகத்திற்கும் இளம் தலைமுறையினர் திறனதிகாரம் பெறும் மையமாக" நமது தேசத்தை மீண்டும் ஆக்குவதற்காக பல முனைப்புத்திட்டங்களை நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

## புதிய கல்விக் கொள்கை (NEP)

இந்த முனைப்புத்திட்டத்திற்கான அவசியம்:

3000 ஆண்டுகளுக்கு முன்பே நமது பெருமைமிகு தேசம், "உலகின் கல்வி தலைநகரமாக திகழ்ந்திருக்கிறது. அறிவு அமுதத்தை அருந்துவதற்காக உலகெங்கிலுமிருந்து இளைஞர்கள் தக்ஸஷீலா, நாளந்தா போன்ற உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயில்வதற்காக வரிசையில் காத்திருந்திருக்கின்றனர். புகழ்பெற்ற பல அறிஞர்களும், மருத்துவர்களும், எழுத்தாளர்களும், அரசர்களும் வானியல் சாஸ்திர அறிவியலாளர்களும் மற்றும் அரசியல்வாதிகளும் வேதங்கள், வேதாந்தம், ஆயுர்வேதம், அறுவைசிகிச்சை, இராணுவம், வானியல் சாஸ்திரம், வர்த்தகம் மற்றும் அரசியல் போன்ற வெவ்வேறு பிரிவுகளில் செழுமையான அறிவைப் பெறுவதற்காக நமது தொன்மையான பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றவர்களே. தாங்கள் விரும்பிய, ஆர்வமுள்ள பிரிவுகளையும், துறைகளையும் தேர்வு செய்து படிக்கின்ற சுதந்திரமும், திறனும் அந்த மாணவர்களுக்கு இருந்தது.

அறிவு தளத்தில் அதிவேகமான மாற்றங்களை இந்த உலகம் கண்டு வருகிறது. சுய–சார்புள்ளதாக ஒரு நாடு உருவாக வேண்டுமென்றால் செழுமையான அறிவை பெறுவதற்கு நல்ல கல்வி அமைப்பு முறை அவசியம். திறனும், திறமையும் உள்ள துடிப்பான இளம் தலைமுறையினர் இந்த உலகிற்கு தேவைப்படுகின்றனர். பாரத தேசம் மட்டுமே உலகின் இந்த தேவையை சரியாக பூர்த்தி செய்ய இயலும் நிலையில் உள்ளது.

1986 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கல்வி மீதான தேசிய கொள்கையை வகுக்கும் செயல்திட்டமானது, 34 ஆண்டுகளுக்குப் பிறகு 2020 ஆம் ஆண்டில்தான் நிறைவடைந்து, நிஜ நிகழ்வாக பரிணமித்திருக்கிறது.

"பாரதத்தின் தற்போதைய மற்றும் அடுத்த தலைமுறையினரை எதிர்காலத்தை திறம்பட எதிர்கொள்பவர்களாக தயார்நிலையில் வைப்பது" என்பதே நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் கனவு செயல்திட்டமான இருக்கிறது. ஒவ்வொரு மாணவரும் அவர் மனதிற்குப் பிடித்த, அவரது திறனுக்கு உகந்த கல்வித்திட்டத்தைப் பின்பற்ற ஒரு வாய்ப்பை பெறவேண்டும் என்பதே இதன் நோக்கம்.





தேசிய கல்விக்கொள்கை 2020 என்பது, 21வது நூற்றாண்டின் முதல் கல்விக் கொள்கையாகும். நமது நாட்டின் வளர்ச்சிக்கான அத்தியாவசிய குறிக்கோள்களை எட்டுவதற்கான வழிமுறைகளை உருவாக்கி இலக்குகளை அடையச் செய்வதே இக்கொள்கையின் நோக்கமாகும்.

கல்வி கட்டமைப்பின் அனைத்து அம்சங்களையும், அதன் விதிமுறைகள் மற்றும் நிர்வாகம் உட்பட, பரிசீலித்து, திருத்தங்கள் செய்து புத்துயிர் ஊட்டுவதே இந்த கொள்கையின் வரைவுத்திட்டமாகும். 21–வது நூற்றாண்டுக்கான கல்வியின் பேரார்வம் மிக்க இலக்குகளை அடைவதற்கு ஏற்றவாறு ஒரு புதிய கல்வி அமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கம்.

## நடப்பு கல்வி அமைப்பின் சவால்கள்:

- மாணவர்களின் கூர்நோக்கம் மதிப்பெண்கள் மீதே இருக்கிறது் செழுமையான அறிவின் மீது அல்ல.
- படைப்பாக்கத் திறனும் புத்தாக்கமும் மிகக்குறைவாகவே இருக்கிறது
- நடைமுறை யதார்த்த அறிவு அடிப்படையில் அல்லாமல் கோட்பாடு / தியரி சார்ந்ததாக இருக்கிறது.
- நமது செழுமையான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் மீதான புரிதலும், மதிப்பீடுகளும் மிக குறைவாக இருக்கின்றன
- மாணவர்களின் விருப்பத்திற்கும், பேரார்வத்திற்கும் உரிய முக்கியத்துவம் தரப்படுவதில்லை.
- சிறந்த முன்மாதிரி ஆசிரியர்களுக்கான தேவை அதிக அளவில் இருக்கிறது
- உயர்கல்வி நிலையங்களை திறம்பட நிர்வகிப்பதற்கு திறனுள்ள அமைப்பு தற்போது இல்லை
- அதிக கல்வி கட்டணம் செலுத்த வேண்டிய நிலை

## தேசிய கல்வி கொள்கையின் பலன்கள்:

- 10+2 கல்வி அமைப்பானது 5+3+3+4 வடிவத்தில் இனி பிரிக்கப்படும்.
- மும்மொழிக் கொள்கை: இந்த கொள்கையின் கீழ் அவர்களது பள்ளிகளில் மூன்று மொழிகளை கற்றுக்கொள்வார்கள். இந்த மூன்று மொழிகளுள் குறைந்தது இரண்டு இந்திய மொழிகளாக இருக்க வேண்டும்.எடுத்துக்காட்டு: சென்னையிலுள்ள ஒரு மாணவர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தை கற்றுக் கொள்பவராக இருப்பின் மற்றுமொரு இந்திய மொழியை அவர் கற்றுக்கொள்வதற்காக தேர்வு செய்ய வேண்டும். (மலையாளம், தெலுங்கு, கன்னடா, இந்தி அல்லது வேறு எந்தவொரு இந்திய தேசிய மொழி)



- இது திறன் அடிப்படையிலான கல்வியை ஊக்குவிக்கிறது மற்று் மாணவர்களின் செய்முறைத் திறன்களை மேம்படுத்துகிறது
- நாட்டில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை வலுப்படுத்துகிறது
- மாணவர்களின் யதார்த்த நடைமுறை அறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- இளவயதிலிருந்தே அறிவியல் சார்ந்த உணர்வை வளர்த்துக்கொள்ள மாணவர்களுக்கு உதவுகிறது
- உலக தரநிலைகளுக்கு நிகரான புதிய தரஅளவிலான உயர்கல்வி மையங்களை நிறுவுவது
- டிஜிட்டல் கற்றலை மேம்படுத்தும் செயல்பாட்டுடன் அனைவருக்கும் கட்டுபடியாகக்கூடிய எளிய கட்டணங்களில் உயர்தர கல்வி
- தங்களது பட்டப்படிப்பிற்காக முதன்மையான மற்றும் பிற பாடத்திட்டங்களை தேர்வு செய்ய மாண–வர்களுக்கு சுதந்திரம்
- திறன் மேம்பாட்டிற்கும், பிராக்டிக்கல் செயல்முறைகளுக்கும் முக்கியத்துவம்
- அனைத்து உயர்கல்வி செயல்பாடுகளுக்கும் ஒரேயொரு கல்வி ஒழுங்குமுறை அமைப்பு

## பணிக்கு ஆட்சேர்ப்புக்கான தேசிய முகமை (National Recruitment Agency)

### இந்த முனைப்புத்திட்டத்திற்கான அவசியம்:

ஒவ்வொரு ஆண்டும், விளம்பரம் செய்யப்படும் ஏறக்குறைய 1.25 லட்சம் அரசு பணிகளுக்கு நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளில் 2.5 கோடி நபர்கள், பெரும்பாலும் இளம் தலைமுறையினர் ஆஜராகின்றனர்.

தற்போது, அரசு பணிகளில் சேரவிரும்பும் தேர்வர்கள் பல்வேறு பதவிகளுக்கு பல்வேறு ஆட்சேர்ப்பு முகமைகளால் நடத்தப்படும் தனித்தனி தேர்வுகளை எழுத வேண்டியிருக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட பல ஆட்சேர்ப்பு முகமைகளுக்கு இத்தேர்வுகளில் பங்கேற்கும் நபர்கள் கட்டணம் செலுத்தவும், தேர்வுகளை எழுதுவதற்காக நீண்டதூரம் பயணிக்கவும் வேண்டியிருக்கிறது.

பணிக்கு ஆட்சேர்ப்புக்கான இத்தகைய பல தேர்வுகள், தேர்வு எழுதுகின்ற இளம் தலைமுறையினர் மீது பெரும் சுமையாக இருப்பதோடு, அந்தந்த ஆட்சேர்ப்பு முகமைகளுக்கும் கடும் பாரமாக இருக்கிறது. இதன் காரணமாக சட்ட ஒழுங்கு / பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தேர்வு அமைவிடம் தொடர்பான பிரச்சனைகளை

எதிர்கொள்வதோடு, செலவீனங்களை திரும்பத் திரும்ப செய்யும் தவிர்க்கக்கூடிய விஷயமும் தற்போதைய தேர்வு முறையில் / ஆட்சேர்ப்பு செயல்பாட்டில் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, தற்போது, ஒரு இளைஞர், ஸ்டா∴ப் செலக்ஷன் கமிஷன் (ளுளுஊ), ரயில்வேஸ் ரெக்ரூட்மென்ட் போர்டு (சுசுடீ), மற்றும் இன்ஸ்டிடியூட் ஆ∴ப் பேங்கிங் பெர்சனல் செலக்ஷன் (ஐடீஞ) ஆகிய தேர்வு முகமைகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், மூன்று தொடக்கநிலை தேர்வுகள் ரீவு) மற்றும் மூன்று இரண்டாம் நிலை தேர்வுகளுக்கு ஆஜராவதோடு, அதைத்தொடர்ந்து தேவைப்படுமானால், உடல்திறன் சோதனைகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகளுக்கும் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

## சவால்கள்:

- ஒன்றுக்கும் மேற்பட்ட பல நுழைவுத் தேர்வுகள் (6)
- தொடர்புகொள்ளவும், ஒருங்கிணைக்கவும் பல்வேறு முகமைகள்
- வரையறுக்கப்பட்ட குறைவான தேர்வு மையங்கள்
- பயணம் மற்றும் தங்கியிருப்பு செலவின் காரணமாக கூடுதல் நிதிச்சுமை
- 2 மொழிகளில் மட்டுமே தேர்வுகள் (ஆங்கிலம் மற்றும் இந்தி)

## பணிக்கு ஆட்சேர்ப்புக்கான தேசிய முகமையினால் கிடைக்கும் பலன்கள்:

- ஒரு பொது நுழைவுத்தேர்வு மற்றும் இது மூன்று நிலைகளுக்கும் நடத்தப்படும்:
- பட்டதாரி, மேனிலைப்பள்ளி (12ஆம் வகுப்பில் தேர்ச்சி) மற்றும் உயர்நிலைப்பள்ளி (10 ஆம் வகுப்பில் தேர்ச்சி) தேர்வர்கள் என மூன்று நிலைகள் இருக்கும்.
- ஒரு ஆண்டுக்கு இருமுறை இந்த பொது நுழைவுத்தேர்வுகள் (ஊநுவு) நடத்தப்படும்.
- தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு ஒரு தேர்வரின் ஊநுவு மதிப்பெண், பணிக்கு ஆட்சேர்ப்புக்கு செல்லத்தக்கதாக இருக்கும்.
- ஊநுவு–ல் ஆஜராவதற்கு ஒரு தேர்வரால் எடுக்கப்படும் முயற்சிகளின் எண்ணிக்கை மீது கட்டுப்பாடு / வரம்பு இருக்காது.
- எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவைச் சேர்ந்த மற்றும் பிற வகையினங்களைச் சேர்ந்த தேர்வர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பில் தளர்வு வழங்கப்படும்.

- இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 12 மொழிகளில் (தமிழ் உட்பட) இத்தேர்வு நடத்தப்படும்.
- ஆட்சேர்ப்பு செயல்முறை சுழற்சியினை இந்த ஒற்றைத் தகுதித்தேர்வு “கணிசமாக குறைக்கும்”.
- ஒன்றுக்கும் மேற்பட்ட, பல தேர்வுகளில் ஆஜராகும் சிரமத்தையும், செலவையும் இது அகற்றும்.
- பல்வேறு தேர்வுகளினால் இதுவரை ஏற்பட்ட நிதிச்சுமையை ஒற்றைத் தேர்வுக்கான கட்டண முறை குறைக்கும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த தேர்வு நடத்தப்படும் என்பதால், தேர்வு எழுதுபவர்களுக்கு ஆகும் பயணம் மற்றும் தங்கியிருப்பு கட்டணம் கணிசமாக மிச்சமாகும். தங்களது சொந்த மாவட்டத்திலேயே தேர்வு நடத்தப்படுவதால், அதிக எண்ணிக்கையில் பெண்கள் அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிப்பதை இது ஊக்குவிக்கும்.
- ஒரேயொரு பதிவு இணையவாசலில் விண்ணப்பதாரர்கள் பதிவு செய்தால் போதுமானது.
- பல்வேறு தேர்வு தேதிகள் ஒரே நாளில் வருமோ என்ற கவலை இனி இல்லை.
- பணிக்கு ஆட்சேர்ப்புக்கான செய்முறை சுழற்சி கடுமையாக குறைக்கப்படும்.
- தேர்வு முறையில் தர நிலைப்படுத்தலை இது கொண்டு வரும்.
- பல்வேறு ஆட்சேர்ப்பு முகமைகளுக்கான செலவுகள் இதனால் குறையும். ஏறக்குறைய 600 கோடி ரூபாய் சேமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பணிக்கு ஆட்சேர்ப்புக்கான தேசிய முகமையை (சேயு) நிறுவுவதற்காக ரூ.1517 கோடி ரூபாய் பட்ஜெட்டை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

## வேலையின்மைக்கான அலவன்ஸ் (கொடுப்பனவு) - அடல் பிமித் வயாக்தி கல்யான் யோஜனா

### இந்த முனைப்புத்திட்டத்திற்கான அவசியம்:

தற்போது நிலவுகின்ற கோவிட்–19 பெருந்தொற்று தொழில்துறையை மிக மோசமாக பாதித்திருக்கிறது. தொழிலகங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், பெருமளவு இளைஞர்கள், அவர்களது வேலைகளை இழந்திருக்கின்றனர் அல்லது இழக்கும் நிலையில் இருக்கின்றனர். இதை கருத்தில் கொண்டிருக்கும் மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும், குறிப்பாக கிராமப்புறங்களைச்

சேர்ந்த இளைஞர்கள் அரசிடமிருந்து தேவைப்படுகின்ற அனைத்து உதவியையும் பெறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்.

### வேலையின்மைக்கான அலவன்ஸ் -ன் மூலம் கிடைக்கும் பலன்கள்:

தொழிலாளர்கள், 90 நாட்கள் காலஅளவிற்கு அவர்களது ஒரு நாள் சராசரி வருவாயில் 50 மூ தொகையை பெறலாம் (மார்ச் 24 முதல், 2020 டிசம்பர் 31 வரையிலான காலஅளவில் வேலையின்மைக்காக)

இத்திட்டத்தின் மூலம் 35 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் (குறிப்பாக இளைஞர்கள்) ஆதாயமடைவார்கள்

பணியாளர் அரசு ஈட்டுறுதி நிறுவனம் (நுளுஐஊ)–ன் கீழ் பதிவு செய்திருக்கின்ற அனைத்து தொழிலாளர்களும் இந்த பலனைப் பெற தகுதியுடையவர்களாக இருப்பார்கள்.

### தகுதிநிலை:

இப்பலனைப் பெறுவதற்கு தொழிலாளர்கள் இஎஸ்ஐ திட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகள் (2018 ஏப்ரல் 1 முதல், 2020 மார்ச் 31 வரை) வரை இணைந்திருக்க வேண்டும் மற்றும் 78 நாட்களுக்கு (2019 அக்டோபர் 1 முதல், 2020 மார்ச் 31 வரை) பங்களிப்பு தொகையை செலுத்தியிருக்க வேண்டும்.

அதிக தகவல் பெற காணவும்: www.esic.nic.in/information-benefits

## திறன் இந்தியா - பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா (PMKVY)

### இந்த முனைப்புத்திட்டத்திற்கான அவசியம்:

இந்தியாவின் இளவயது பணியாளர்களில் மிகக்குறைந்த விகிதாச்சாரத்தில் உள்ள நபர்களே ஏதாவது ஒரு முறைப்படியான திறன் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றனர் உலகளவில் மிக அதிக எண்ணிக்கையில் இளவயதினரைக் கொண்டிருக்கும் இந்தியாவில், இவர்களுக்கு சிறப்பான வேலை மற்றும் சுய வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு திறன்களும் மற்றும் உரிய பயிற்சியும் தேவைப்படுகிறது. இந்தியாவின் பொருளாதாரம் வளர வேண்டுமென்றால், ஒவ்வொரு துறையிலும் அதன் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு திறன்மிக்க பணியாளர்கள் குழு அத்தியாவசியமாகும்.

முதிர்ச்சியடைந்த வயதிலுள்ள தொழிலாளர்களே அதிகமாக இருக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு உயர்திறன் மிக்க பணியாளர்களை அனுப்புகின்ற முதன்மை நாடாக உருவாகும் ஆற்றலும், சாத்தியத்திறனும் இந்தியாவிற்கு





இருக்கிறது. இந்திய இளம் தலைமுறையினர் திறன் பயிற்சியை மேற்கொள்ளவும், அதன்மூலம் பணியமர்த்தப்படும் திறன் கொண்டவர்களாக தங்களை தயார்செய்து நல்ல வருவாய் ஈட்டவும் வழிவகை செய்வது அவசியமாகும். குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இது அத்தியாவசியமாகும். ஏற்கனவே பணியாற்றி வரும் தொழிலாளர்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு பயிற்சியளிப்பது மற்றும் சான்றாக்க தகுதி பெறுமாறு செய்வதும் இந்த காலகட்டத்தின் உடனடி தேவையாக இருக்கிறது.

### சவால்கள்:

- திறன் கற்றலுக்கு (அடிப்படை மற்றும் குறைந்த காலஅளவு) முறையான பயிற்சி மையங்கள் இல்லை
- உரிய திறன்கள் இல்லாமல், அடிப்படையான வேலைவாய்ப்பை பெறுவது சிரமமாக இருக்கிறது.
- தொழில்துறையின் தேவைக்கும் மற்றும் பணிக்கு விண்ணப்பிப்பவர்களின் திறன்களுக்குமிடையே பெரும் இடைவெளி இருக்கிறது
- கிராமப்புறங்களைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் இத்தகைய திறன் தகுதி பெறாதவர்களாக இருக்கின்றனர்

## திறன் இந்தியா திட்டத்தின் மூலம் கிடைக்கும் பலன்கள்:

- அதிகரித்த வேலைவாய்ப்புகள்
- இளைஞர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை உயர்த்த இயலும்
- உற்பத்தித்திறன் மற்றும் அறிவு மேம்படும்
- உடல்உழைப்புள்ள ப்ளூ–காலர் பணிகளைப் பெற இளைஞர்களை ஏதுவாக்கும்
- பள்ளி அளவிலேயே திறன்கள் உருவாக்கம்
- அனைத்து துறைகளிலும் சமச்சீரான வளர்ச்சி
- அனைத்து பணிகளுக்கும் சம முக்கியத்தும்
- பணியில் சேரவிரும்பும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக மென்திறன் பயிற்சி
- இந்தியாவின் கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு மிகப்பெ–பரிய உதவியாக இருக்கும்.

**இந்த முனைப்புத் திட்டத்தின் சாதனைகள் (2020 ஆகஸ்ட் வரை)**

| விவரணை | புள்ளி விவரங்கள் |
|---|---|
| பயிற்சி மையங்கள் (முன் கற்றல்) | 22550 |
| பயிற்சி பெற்ற தேர்வர்கள் | 3320403 |
| பயிற்சியளிக்கும் பார்ட்னர்கள் | 141 |
| பணி எண்ணிக்கை | 586 |
| குறுகிய கால பயிற்சி மையங்கள் | 8804 |
| பயிற்சி பெற்ற தேர்வர்கள் | 3417641 |
| பணியமர்த்தல் சதவிகிதம் | 56% |

**மேலும் தகவல்களுக்கு: //www.pmkvyofficial.org/Index.aspx**

## தொடக்க (ஸ்டார்ட்அப்) இந்தியா

### இந்த முனைப்புத்திட்டத்திற்கான அவசியம்:

இந்திய மக்கள், குறிப்பாக இளம் தலைமுறையினர், நமது பொருளாதாரத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்க மிகப்பெரிய சாத்தியத்தையும், திறனையும் மற்றும் திறமையையும் கொண்டிருக்கின்றனர். திறன்மிக்க பல இளம் தொழில்முனைவோர்கள் தங்களுக்கென சொந்தமாக தொழில் தொடங்க விரும்பிய போதிலும் போதுமான நிதி ஆதரவு இல்லாத காரணத்தாலும் மற்றும் பிற ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளினாலும் அத்தகைய தொழில் நிறுவனங்களைத் தொடங்க இயலாமல் சிரமப்பட்டு வந்தனர்.

இதனை உணர்ந்த நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், “வேலை வாய்ப்பை தேடுபவர்களாக இருப்பதற்குப் பதிலாக, வேலைவாய்ப்பை வழங்குபவர்களாக” நமது இளைஞர்கள் உருவாக வேண்டும் மற்றும் அதற்கான திறனதிகாரம் பெற வேண்டும் என்று விரும்பினார்.

இந்த பாரத தேசத்தை “இளைஞர்களின் திறனதிகாரத்தோடு முன்னேறும் பொருளாதார சக்தியாக” ஆக்க வேண்டும் என்பதே நமது பிரதமரின் தொலைநோக்குப் பார்வையாகவும், திட்டமாகவும் இருக்கிறது.

அதனை செயல்படுத்துவதற்கான முனைப்புத்திட்டமான ஸ்டார்ட்அப் இந்தியா ஹப் என்பது, ஸ்டார்ட்அப் சூழலமைப்பில் அனைத்துப் பங்குதாரர்களுக்குமான ஒரு ஒற்றை – நிறுத்த செயல்தளமாகும். ஒருவர் மற்றொருவரோடு கலந்துரையாடி செயல்படவும், அறிவு பரிமாற்றம் செய்யவும், அதிக மாற்றங்களை வேகமாக எதிர்கொள்கின்ற சூழலில் வெற்றிகரமான கூட்டாண்மைகளை உருவாக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

### ஸ்டார்ட்அப் இந்தியா திட்டத்தின் மூலம் கிடைக்கும் பலன்கள்:

- ஸ்டார்ட்அப் நிறுவனங்களை ஊக்குவிக்க, 10,000 கோடி ரூபாய்க்கு பிரத்யேக நிதியம்
- மின்–பதிவு முறை மற்றும் சுய – சான்றாக்க இணக்கநிலை
- முதல் 3 ஆண்டுகளுக்கு கண்காணிப்பு ஆய்வுகள் இல்லை
- முதல் 3 ஆண்டுகளுக்கு லாபத்தின் மீது வருமான வரி விதிப்பு இல்லை
- ஒரே நாளில் ஸ்டார்ட்அப் நிறுவன பதிவை மேற்கொள்ள மொபைல் செயலி
- தொடர்புக்கான ஒற்றை முனையாக செயல்படும் ஸ்டார்ட்அப் இந்தியா ஹப்
- எளிதான வெளியேறல் கொள்கை
- பெண் விண்ணப்பதாரர்களுக்கு சிறப்பு ஏற்பாடு

மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களது சீரிய தலைமையின் கீழ்,முதன் முறையாக ஸ்டார்ட்அப் சூழலமைப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. தன்னிறைவு பெற்ற பாரத நாட்டிற்கு பங்களிப்பை அதிக புத்தாக்க சிந்தனைகளோடு வழங்க இளைஞர்களுக்கு திறனதிகாரம் பெறுமாறு செய்வதே இதன் குறிக்கோள்.

### இந்த முனைப்புத்திட்டத்தின் சாதனை (2020 ஆகஸ்ட் வரை):

| விவரணை | புள்ளி விவரங்கள் |
|---|---|
| அங்கீகாரம் அளிக்கப்பட்ட மொத்த ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் | 35,547 |
| SIDBI- இடமிருந்து நிதி ஆதரவு பெற்றவை | 264 |
| ஸ்டார்ட்அப் இந்தியா ஹப் – ன் உறுப்பினர்கள் | 4,24,371 |

**மேலும் தகவல்களுக்கு: https://www.startupindia.gov.in/**

# தேசிய தொழில்முனைவோர் விருதுகள்

## முன்முயற்சி தேவை:

இளைஞர்களிடம் திறமை உள்ளது. திறமை அங்கீகரிக்கப்பட வேண்டும். அங்கீகரிப்பு செய்வது என்பது பங்கேற்பையும், பங்களிப்பையும் இயல்விக்கச் செய்கிறது.

தேசத்தை மாற்றுவதற்கும் மற்றும் நம் தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் திறமைமிக்க நம் பாரத இளைஞர்கள் பொறுப்பேற்பதற்கு விரும்பும் நிலையில், தலைசிறந்த இளம் முதல் – தலைமுறை தொழில்முனைவோர் மற்றும் அவர்களுடைய சூழலமைப்பு மேம்பாட்டாளர்களின் தொழில்முனைவு மேம்பாட்டிற்கு அவர்களுடைய சிறந்த பங்களிப்பிற்காக அவர்களை அங்கீகரித்து, அங்கீகரிக்க வேண்டியது அவசியமாகும்.

நம்முடைய மாண்புமிகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் உரிய அங்கீகரிப்பைக் கொண்டு திறமையை செயல்படுத்துவதில், பயன்படுத்துவதில் எப்போதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

இளைஞர்களின் திறமைகளை அடையாளம் காண்பதற்காக வேண்டி தேசிய தொழில்முனைவோர் விருதுகள் 2016–ல் தொடங்கப்பட்டது.

## NEA நன்மைகள்:

- பல துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன (ஜவுளி, வேளாண்மை, சுகாதார பராமரிப்பு, சுற்றுலா, தளவாடங்கள் முதலியன).
- துறைகளுக்கான விருது & சிறப்பு பிரிவுக்கான விருதுகள் என விருதுகள் வகை பிரிக்கப்பட்டுள்ளன.
- வெற்றி பெறுபவர்கள் கோப்பை, சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசுகள் (5 லட்சம் ரூ 10 லட்சம்) ஆகியவற்றைக் கொண்டு அங்கீகரிக்கப்படுகின்றனர்.
- முதல் 3 ஆண்டுகளுக்கு ஆய்வு இல்லை.
- முதல் 3 ஆண்டுகளுக்கு இணையத்தின் மீது வருமான வரி இல்லை.

## பிற உத்தேசிக்கப்பட்டுள்ள முன்முயற்சிகள் (தொழில்முனைவு மேம்பாடு):

- இந்தியா முழுவதும் வாய்ப்புத்திறனுள்ள மற்றும் ஆரம்பநிலை தொழில்முனைவோர்களுக்கு கற்பித்தல் மற்றும் வேண்டியதைக் கொடுத்தல்
- தொழில்முனைவோர்களை சகாக்கள், வழிகாட்டிகள் முழுவளர்ச்சியுறாத காலத்திற்கு முன்பே

தொழில்முனைவோர்களை வளர்ப்பவர்களுடன் தொடர்பு ஏற்படுத்துதல்

- தொழில்முனைவு மையங்கள் (மின்–மையங்கள்) மூலம் தொழில்முனைவோர்களுக்கு ஆதரவளித்தல்
- தொழில்முனைவை ஊக்குவிப்பதற்கு ஒரு கலாச்சார மாற்றத்தை முடுக்கிவிடுதல்.
- குறைவான அங்கம்வகிப்பு குழுவினர்களிடையே தொழில்முனைவை ஊக்குவித்தல்
- மகளிர்களிடையே தொழில்முனைவை ஊக்குவித்தல்
- சமூக தொழில்முனைவு மற்றும் அடிமட்ட புத்தாக்கங்களை வளர்த்தல்

**மேலும் தகவல்களுக்கு: //www.msde.gov.in/nea.html**

## விளையாடு (கேலோ) இந்தியா
## (Khelo India)

### முன்முயற்சி தேவை:

ஒரு தகுதியான மனம், மூளை மற்றும் உடல் என்பது பல வழிகளில் சிறப்பாக பங்களிக்க முடியும் மற்றும் ஒரு மனிதனில் மகத்தான தரத்தைக் கொண்டுவர முடியும். ஒரு நாட்டின் இளைஞர் ஆற்றலை விளையாட்டுகளில் அவர்களுடைய தீவிர பங்கேற்பைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

விளையாட்டு என்பது, நம் நாட்டு ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஒருவரின் வாழ்க்கையில் விளையாட்டு மற்றும் தகுதியின் முக்கியத்துவம் விலை மதிப்பற்றது. விளையாட்டு விளையாடுதல் என்பது அணி உணர்வை, கூட்டு முயற்சியை தூண்டுகிறது மற்றும் உத்தி வாய்ந்த சிந்தனை, பகுப்பாய்வு, சிந்தனை, ஆளுமைத்திறன்கள், இலக்கு நிர்ணய மற்றும் ஆபத்து எதிர்கொண்டும் திறன்களை வளர்க்கச் செய்கிறது. ஒரு தகுதியான மற்றும் ஆரோக்கியமானவர் என்பது, அதற்கு சரிநிகரான ஆரோக்கியமான சமுதாயம் மற்றும் வலிமையான நாட்டிற்கு வழிவகுக்கக்கூடும்.




துரதிருட்வசமாக, நம் நாட்டில் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு விளையாட்டில் அவர்களுடைய திறமைகளை அடையாளம் காணக்கூடிய மற்றும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு தளம் இல்லை.

முதல்முறையாக நம் நாட்டில் விளையாடக்கூடிய அனைத்து விளையாட்டுகளுக்கும் ஒரு வலிமையான கட்டமைப்பை உருவாக்கி, இந்தியாவை ஒரு மாபெரும் விளையாட்டு செறிந்த நாடாக உருவாக்குவதற்காக அடிமட்ட அளவில் இந்தியாவில் விளையாட்டு கலாச்சாரத்தை புதுப்பிப்பதற்கு கேலோ இந்தியா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### விளையாடு இந்தியா நன்மைகள்:

- உயர் அதிகாரம் மிக்க குழுவால், பல்வேறு நிலைகளில் பல விளையாட்டு பிரிவுகளில் முன்னுரிமை அடிப்படையில் அடையாளம் காணப்படும் திறமையான இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஓராண்டிற்கு 5 இலட்ச ரூபாய் என்ற வருடாந்திர நிதியுதவி வீதம் 8 ஆண்டுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும். துறைகள் விருது & சிறப்பு பிரிவு விருதுகள் என விருதுகள் வகை பிரிக்கப்பட்டுள்ளன.
- வில்வித்தை, தடகளம்,பேட்மின்டன், கூடைப்பந்து, குத்துச்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், ஹாக்கி, ஜூடோ, கபடி, கோ–கோ, துப்பாக்கிச் சுடுதல், நீச்சல், கைப்பந்து, எடைதூக்குதல் மற்றும் மல்யுத்தம் போன்ற விளையாட்டு பிரிவுகள் குறிப்பாக ஊரக இளைஞர்கள் பங்கேற்பதற்கென்று ஊக்குவிக்கப்படுகின்றன.
- இந்தியா முழுவதும் இந்த திட்டத்தின் கீழ் விளையாட்டை பின்பற்றுவதற்கு 1.6 கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகளும் மற்றும் இளைஞர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

# ஒரு தேசப்பற்றுமிக்க வீரராக





# 4.ஒரு தேசப்பற்றுமிக்க வீரராக

### நம் தாயை அக்கறையுடன் கவனித்துக்கொள்வதும் & தாய்க்கு பணியாற்றுவதும் நம் கடமையாகும்

### ஆனால் நாட்டை பாதுகாப்பதும் & நாட்டிற்காக உயிர்தியாகம் செய்வதும் தேசப்பற்று, தேசபக்தி ஆகும்

தங்கள் படைகளை தலைமைதாங்கி பல பிரசித்திபெற்ற வெற்றிகளுக்கு வழிவகுத்து நம் மாபெரும் தேசத்தை பாதுகாத்த சந்திர குப்த மவுரியா; அசோகர், ராஜ ராஜ சோழன், கிருஷ்ணதேவராயர் மற்றும் சிவாஜி மகாராஜா போன்ற மாவீரர்கள் நம் தேச வரலாற்றில் உள்ளனர்.

ஒரு தேசம் வலிமையுடையதாகவும் மற்றும் பாதுகாப்புடையதாகவும் இருப்பதற்கு, நாட்டை பாதுகாக்க மட்டுமில்லாமல் ஏதும் பகைவர்களால் தூண்டிவிடப்படும்போது ஒரு கடுமையான எச்சரிக்கையை விடுவதற்கும் ஒரு வலிமையான ஆயுதப்படை தேவைப்படுகிறது.

ஆனால், தங்களை முன்னணியிலிருந்து வழிநடத்தக்கூடிய ஒரு தேசப்பற்று மிக்க தலைவர் தங்களுக்கு இருக்கும்போது மட்டுமே காவல் படை உள்ளிட்ட வலிமையான ஆயுதப்படைகள் சுதந்திரத்துடன் செயல்பட முடியும்.எல்லையில் நம் நாட்டின் ஆயுதப்படைகளுடன் சேர்ந்து தீபாவளி பண்டிகையை தொடர்ந்து 6 ஆண்டுகளாக கொண்டாடிவரும் உலகில் உள்ள பிரதமர்களிலேயே ஒரே பிரதமர் நம் தேசப்பற்றுமிக்க நரேந்திர மோடி மட்டுமே ஆவார்.

ஆயுதப்படை வீரர்களின் மனவுறுதியை திடப்படுத்துவதற்கும் மற்றும் அவர்களுடைய தேசப்பற்று மற்றும் தியாகத்திற்குரிய மதிப்பை எடுத்துக்காட்டுவதற்கும் வளர்ச்சி & திறனதிகாரமளிப்பு ஆயுதப்படைகளுக்கு சரிநிகராகத் தேவைப்படும். வரலாற்றில் முதல்முறையாக, நம் ஆயுதப்படைகளுக்கு ஆற்றலதிகாரமளிப்பதற்கு பல நல திட்டங்கள் வகை செய்யப்பட்டுள்ளன.

உலகில் உள்ள பிற நாடுகளைப் போன்றே, பயங்கரவாதமும், தீவிரவாதமயமாக்கலும் நாட்டின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்களாக உள்ளன. மாண்புமிகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் தலைமையின்கீழ், மாற்றம் விளைவிக்கக்கூடிய தேசிய வளர்ச்சி மற்றும் மேம்பாடை எய்துவதற்காக ஒரு அமைதியான மற்றும் செயல்படுத்த ஏதுவான சுற்றுச்சூழலை வகை செய்வதற்கு இந்தியாவின் வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு கொள்கைகள் வலிமையாக்கப்பட்டன.

ஒரு குடிமகனின் ஒரு உயிரை காப்பாற்ற வேண்டியது ஒரு மருத்துவரின் கடமை, ஒரு குடிமகனின் ஒரு உயிரைப் பாதுகாக்க வேண்டியது ஒரு பொறுப்புள்ள தலைவரின் கடமை. 2004–லிருந்து 2009 வரை, பயங்கரவாத குண்டு வெடிப்புகளின் காரணத்தால் பல ஆயிரக்கணக்கான அப்பாவி குடும்பங்கள் தங்கள் அன்பிற்குரியவர்களை இழந்துள்ளனர்.

ஆனால் நம் ஆயுதப்படைகள் மற்றும் காவல் படைகளின் அர்ப்பணிப்பு, தேசப்பற்று, உறுதிப்பாடு மற்றும் தியாகம் காரணத்தால் எந்த ஒரு குண்டு வெடிப்பும் நிகழவில்லை.

நம் பெருமைமிகு தேசத்தை பாதுகாப்பதற்கு இந்த தன்னலமற்ற சேவைக்காக, நம் ஆயுத மற்றும் காவல் படைகளுக்கு நாம் அனைவரும் தலைவணங்க வேண்டும்.

## திறனதிகாரமளிப்பு முன்முயற்சிகள்:

- ஒரு 70 ஆண்டுகள் கனவு, நம் போர்வீரர்களின் தியாகங்களை மதித்து மரியாதை செலுத்துவதற்கு ஒரு போர் நினைவுச்சின்னம் அர்ப்பணிக்கப்பட்டது.
- இந்தியாவின் வரலாற்றில் முதல்முறையாக மோடி 1.0 காலஅளவின்போது ஒரு முழு–நேர பெண் பாதுகாப்பு துறை அமைச்சர் நியமிக்கப்பட்டார் – பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.
- பாதுகாப்பு & போரில் பங்காற்றுவதற்கு பெண்களுக்கு அதிக பங்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது
- ஆயுத படைகளுக்கான அதிக ஒருங்கிணைந்த முடிவெடுத்தலுக்காக முதல் பாதுகாப்புப் படைத்தலைவர் (CDS) பதவிப்பணி உருவாக்கப்பட்டுள்ளது.
- மிஷன் சக்தி: வெற்றிகரமான செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணை சோதனை (அமெரிக்கா, ரஷ்யா & சீனாவிலிருந்து அடுத்து மட்டும்)
- 1973 லிருந்து நிலுவையிலிருக்கக்கூடிய ரூ. 35,000 கோடி ஒப்புதலுடன் 24 லட்சம் முன்னாள் படைவீரர்கள் மற்றும் 6 லட்சம் போர் விதவைகளுக்கு மேற்பட்டவர்கள் பயனடையும் ஒரு ரேங்க் ஒரு பென்ஷன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- முதல்முறையாக எல்லைப்பகுதியில் (பாகிஸ்தான் & மியான்மர்) பயங்கரவாத ஏவுதளங்களை அகற்றுவதற்காக இந்திய ராணுவம் சர்ஜிக்கல் தாக்குதல் நடத்தியது.
- இந்திய தொழிலுக்கு பெரும் ஊக்குவிப்பு – இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டத்தை ஊக்குவிப்பதற்காக பல்வேறு இந்திய தொழிற்சாலைகளுடன் ரூ. 1.1 லட்சம் கோடி மதிப்புள்ள 128 ஒப்பந்தங்கள்

கையொப்பமிடப்பட்டன.

- முன்னாள் படைவீரர்களின் மகள் / விதவைகளின் திருமண மானியம் ரூ. 16,000 லிருந்து ரூ. 50,000க்கு அதிகரிக்கப்பட்டது.
- இந்தியா ர.ஃ.பேல் ஜெட் போர் விமான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது மற்றும் முந்தைய அரசாங்கத்துடன் ஒப்பிடும்போது ரூ. 12,600 கோடி மிச்சப்படுத்தியது.
- முதல்முறையாக இந்திய போர்வீரர்களுக்கு குண்டுகள் துளைக்க முடியாத ஜாக்கெட்டுகள் வழங்கப்பட்டன (2,30,000 க்கு மேற்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள்)
- 20 கோடி மானியத்துடன் கோயம்புத்தூர் பாதுகாப்பு புத்தாக்க மையம்
- உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவளிப்பதற்கு இந்திய MSME தொழில்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு (சென்னை, சேலம், ஓசூர், கோயம்புத்தூர், திருச்சி) & உத்தரப்பிரதேசத்தில் பாதுகாப்பு உற்பத்தி காரிடர்கள்.
- ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் 24×7 மணிநேரமும் அர்ப்பணிப்பு & தேசிய பற்றுடன் இந்தியாவின் 15,106 நில எல்லையையும் & 7516 கடற்கரையோர எல்லையையும் பாதுகாத்தல்.
- இடதுசாரி தீவிரவாத (LWE) சம்பவங்கள் 60% குறைந்துள்ளது.
- 50க்கும் மேற்பட்ட மாவட்டங்களிலிருந்து நக்சல்பாரி & இடதுசாரி வன்முறை அகற்றப்பட்டுள்ளது.
- நக்சல் வன்முறை காரணத்தால் பாதுகாப்புப் படைகளில் ஏற்படும் இழப்புகள் 55% குறைந்துள்ளன.
- இந்தியா பயங்கரவாத திறனை எதிர்ப்பதற்கு தேசிய புலனாய்வு தொகுப்பு உதவுகிறது.
- சமீபத்திய தொழில்நுட்பத்தைக் கொண்டு இந்தியாவின் எல்லையை பாதுகாப்பதற்கு முதன்முறையாக இந்தியாவில் விரிவான ஒருங்கிணைந்த எல்லை மேலாண்மை அமைப்பு (CIBMS) நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- எல்லைப் பகுதிகளில் வளர்ச்சியை கொண்டுவரும் வகையில் எல்லைப்பகுதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் ஒரு சாதனையளவில் ரூ 3 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


## சிறப்பம்சங்கள்:


- 2015 ஏப்ரல் மற்றும் 2020 ஆகஸ்ட் இடைப்பட்ட காலஅளவில் ஒரு ஏறக்குறைய ரூ. 3.5 லட்சம் கோடி செலவில் பாதுகாப்புத்துறை இனங்களுக்கான 260 திட்டங்கள் முப்படைகளால் (Tri-Services) ஒப்பந்தம் செய்யப்பட்டது.




- 2018–19–ல் மட்டும் பல எல்லைப்பகுதி சுரங்கங்கள் & கட்டுமான திட்டங்கள் தொடங்கப்பட்டன/முடிக்கப்பட்டன.
- (தெங் சுரங்கம், சே லா சுரங்கம், ஆக்னூர் – பூஞ்ச் சாலை, ரோட்டங் சுரங்கம், லடாக்கில் மிக உயரமான மோட்டார் வாகனங்கள் செல்லக்கூடிய சாலை)
- உலகம் முழுவதும் ஐநா மிஷன்களில் 50%ல் உள்ள நிலையில் ஐநா அமைதிப்படையில் இந்திய ராணுவம் தொடர்ந்து ஒரு முக்கிய பங்காற்றிவருகிறது.
- பாதுகாப்புத்துறையில் பணிபுரியும் தொழிலுக்கு ஒரு தோழனாக செயல்படுவதற்கு 2018 ஜனவரியில் பாதுகாப்புதுத்றை முதலீட்டாளர் பிரிவு தொடங்கப்பட்டது.
- தி ஐடெக்ஸ் (IDEX) திட்டம்: MSMEகள், ஸ்டார்ட்–அப்கள், புத்தாக்க தனிநபர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் மூலம் பாதுகாப்பு மற்றும் விண்வெளி துறையில் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டை வளர்ப்பதற்கு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மேற்கொள்வதற்கு அவற்றிற்கு மானியங்கள் / நிதியுதவி வழங்குவதற்கு ஒரு சூழலமைப்பை உருவாக்குவது நோக்கமாகும்.
- தி ஐடெக்ஸ் (IDEX) திட்டம், டி.ஃ.பன்ஸ் இந்தியா ஸ்டார்ட்–அப் சேலஞ்சஸ் (DISCs) ஒருங்கிணைந்து நடத்தப்பட்டு வருகின்றன.

| சர்வீஸ் | சாவல்கள் எண்ணிக்கை | ஸ்டார்ட்-அப் இணக்கங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| இந்திய ராணுவம் | 4 | 159 |
| இந்திய விமானப்படை | 5 | 222 |
| இந்திய கப்பற்படை | 4 | 173 |
| HAL | 2 | 82 |
| மொத்தம் | 15 | 636 |


No of Licenses Issued
80
70
60
50
40
30
20
10
0
9
24
74
No of Licenses
2016-17
2017-18
2018-19


Value of Production of Defence PSUs
46000
45000
44000
43000
42000
41000
40000
39000
38000
37000
39729
40788
43554
45011
Defence PSUs (Value)
2015-16
2016-17
2017-18
2018-19


Total Defence Exports(Rs in Crore)
12000
10000
8000
6000
4000
2000
0
10745
4682
1521
Export in Cr (INR)
2016-17
2017-18
2018-19

# ஒரு அர்ப்பணிப்பு கொண்ட தொண்டராக







# 5. ஒரு அர்ப்பணிப்பு கொண்ட தொண்டராக

**ஒரு குடும்பத்திற்கு சேவை செய்ய ஒருவர் தனது**
**கடுமையான உழைப்பை அர்ப்பணிக்க வேண்டும்**

**ஒரு நாட்டிற்கு சேவை செய்ய ஒருவர் தனது**
**ஒட்டுமொத்த வாழ்க்கையையும் அர்ப்பணிக்க வேண்டும்**

ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் நம் நாட்டிற்கு சேவை செய்ய தனது இளம் வயது முதற்கொண்டே தனது ஒட்டுமொத்த வாழ்க்கையையும் அர்ப்பணித்துக் கொண்டார். ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள், 1985ம் ஆண்டில் பாரதிய ஜனதா கட்சியில் (பிஜேபி) இணைந்தார் மற்றும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற அவருடைய அர்ப்பணிப்பு,பேரார்வம் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் காரணத்தால் ஒரு ஆர்வலராக அவர் ஆற்றிய ஒவ்வொரு சேவையும் நாட்டிற்கு உதவியது.

**பாரதிய ஜனதா கட்சி** – அர்ப்பணிப்பு மற்றும் செயல்வீரர்களின் பங்கேற்பு மூலம் "நாடே முழு முதலாகும் என்ற மனப்பான்மையுடன்" ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய, பின்பற்றக்கூடிய & கொடுக்கக்கூடிய உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சி.

**செயல்வீரர் - பாரத கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை மதிக்கக்கூடிய மற்றும் பொது மக்களின் தேவைகளை புரிந்துகொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் சமுதாயத்திற்கு சேவை செய்வதற்கு அவர்களுடன் அடிமட்ட அளவில் இணைப்பை இயல்விக்கச் செய்யக்கூடிய ஒருவர்.**

1991ல் ஒரு செயல்விரராக ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் மேற்கொண்ட ஒற்றுமை பயணம் தான் அவருடைய வாழ்நாளில் மிகவும் மறக்கமுடியாத நிகழ்வாகும். குறிப்பாக ஜம்மு & காஷ்மீர் நிலைமையில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் அவசியத்தைத் தெரிவிப்பதற்குதான் ஒற்றுமை பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயணம் அப்போதைய பிஜேபி தேசிய தலைவர் ஸ்ரீ முரளி மனோஹர் ஜோஷி அவர்களின் தலைமையில் கன்னியாகுமரியிலிருந்து தொடங்கியது.

இரத்தத்தில் தேசப்பற்று மற்றும் இதயத்தில் தேசிய ஒற்றுமையுடன் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலை வீரத்துடன் எதிர்கொண்டெழுந்த பல தேசப்பற்றுடைய செயல்வீரர்களுடன் சேர்ந்து 1992–ம் ஆண்டு ஜனவரி 26 குடியரசு தினத்தன்று ஸ்ரீநகரில் லால் சவுக்கில் நம் தேசிய கொடியை ஏற்றியதன் மூலம் இந்தப் பயணம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள், கட்சியின் அடிக்கல் நாட்டப்பட்ட 40வது ஆண்டு தினத்தில், கொரோனா வைரஸ் தொற்று பரவல் நெருக்கடி இடையே நாட்டிற்கு சேவை புரிய ஐந்து விஷயங்களைச் செய்யுமாறு பிஜேபி செயல்விரர்களை கேட்டுக்கொண்டார்.

**முதலாவது - ஏழைகளுக்கு உணவு:** ஏழைகளுக்கு உணவுப்பொருள் வழங்கி உதவுமாறும் மற்றும் ஒரு ஏழைகூட உணவு இல்லாமல் தவிக்க விடாமலிருப்பதை உறுதிசெய்யுமாறும் பிஜேபி செயல்வீரர்களை ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**இரண்டாவது - முககவசம் வினியோகிப்பு:** அனைத்து பிஜேபி செயல்வீரர்களும் தேவையானவர்களுக்கு உதவச் செல்லும்போது ஒரு முககவசம் அணிய வேண்டும் என்று ஸ்ரீ நரேந்திர மோடி வலியுறுத்தினார். ஏதாவது துணி கொண்டு தங்கள் முகத்தை மூடிக்கொள்ளுமாறும் ஐந்து முதல் ஏழுக்கு மேற்பட்டவர்களுக்கு முககவசத்தை வினியோகிக்குமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

**மூன்றாவது- கொரோனாவுக்கு எதிரான போராளிகளுக்கு கவுரவம்:** கோவிட்–19 எதிர்த்து போராடுபவர்களுக்கு ஒரு 'நன்றி தெரிவிப்பு பிரசாரத்தை" செய்யுமாறு செயல்வீரர்களை ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் கேட்டுக்கொண்டார். மருத்துவர்கள், செவிலியர்கள், வங்கி அலுவலர்கள், அஞ்சல் அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், அத்தியாவசிய பணிகள் தொடர்புடையவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

**நான்காவது - கோவிட்-19ஐ எதிர்த்து போராடுவதற்கு தொழில்நுட்பம்:** இந்திய அரசாங்கத்தின், கோவிட்–19 கண்காணிப்பு குறித்த அதிகாரபூர்வ மொபைல் செயலியான ஆரோக்கிய சேது செயலி (யுயசழபலய ளுநவர யபீ) குறித்து அதிக மக்கள் தெரிந்துகொள்ளச் செய்வதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு பிஜேபி செயல்விரர்களை ஸ்ரீ நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார். இந்தச் செயலியை குறைந்தபட்சம் 40 பேர் பதிவிறக்கம் செய்வதை ஒவ்வொரு தொண்டரும் உறுதிசெய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

**ஐந்தாவது - தேசத்திற்கு பங்களித்தல்:** கோவிட்–19 தொற்று பரவலுக்கு எதிராக தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு குடிமக்களை பங்களிக்கச் செய்வதற்காக நிறுவப்பட்ட PM-CARES Fund என்ற நிதிக்கு குறைந்தபட்சம் 40 பேர் நன்கொடையளிக்க ஊக்குவிக்கச் செய்வதுடன் ஒவ்வொரு பிஜேபி செயல்வீரரும் நன்கொடை பங்களிக்க வேண்டும் என்று ஸ்ரீ நரேந்திர மோடி கூறினார்.

ஒரு அர்ப்பணித்துக்கொண்ட செயல்வீரராக, ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் நம் கலாசாரம், தேசம் மற்றும் சமுதாயத்திற்கு சேவை செய்தல் என்ற மந்திரத்தின் மகிமை மற்றும் மதிப்பு குறித்து கோடிக்கணக்கான சாதாரண

செயல்வீரர்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். ஒவ்வொரு பொறுப்பான குடிமகனும் ஒரு செயல்வீரராவார்.

ஏழைக்கு உதவுவது, சாமானிய மக்களுக்கு அதிகாரம்பெறச் செய்வது, இளைஞர்களுடன் தொடர்புகொள்வது மற்றும் நம் பெருமைமிகு தேசத்தை மாற்றமடையச் செய்வதே ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் செயல்வீரராக 19 ஆண்டு அர்ப்பணிக்கப்பட்ட பொது வாழ்க்கை இருந்தது.

# ஒரு சீர்திருத்தவாதியாக







## 6. ஒரு சீர்திருத்தவாதியாக

ஒருவர் ஒரு சீர்திருத்தவாதியாக இருப்பதற்கு, வளர்ச்சி மற்றும் மாற்றத்தை கொடுப்பதற்கு அவருக்கு பேரார்வம், தேசப்பற்று மற்றும் பரிபூரணத்துவம் தேவை.

### நாம் நம் நினைவை பின்னோக்கி 2013ம் ஆண்டிற்கு கொண்டுசெல்வோம்:

- இந்தியா "ஊழலின் தலைநகரம்" என அழைக்கப்பட்டது
- 6 கோடி ஏழை பெண்கள் எல்பிஜி எரிவாயு இல்லாமல் பாதிக்கப்பட்டனர்
- 9 கோடி ஏழை மக்கள் கழிவறைகள் இல்லாமல் தவித்து வந்தனர்
- 32 கோடி ஏழை மக்கள் வங்கி கணக்கு வசதி இல்லாமல் இருந்தனர்
- 19 கோடி பேர் காப்பீடு (ஆயுள் & விபத்து) எடுக்க வசதி இல்லாமல் இருந்தனர்
- 18 கோடி ஏழை விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலத்தின் மண்வளம் பற்றி தெரியாமல் இருந்தனர்
- 14 கோடி ஏழை விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு பெற முடியவில்லை
- வெறும் 35% விவசாயிகளுக்கு மட்டுமே யூரியா பெற முடிந்தது
- 18,600க்கு மேற்பட்ட கிராமங்களில் மின்சார வசதி இல்லை
- 1,76,000 கிமீ கிராம சாலைகள் கட்டுமானம் செய்யப்படவில்லை
- ஏழை மக்களுக்கான ரூ. 90,000 கோடி அரசு மானியப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது
- 24 லட்சம் முன்னாள் படைவீரர்கள் மற்றும் 6 லட்சம் போர் விதவைகளுக்கு ஒரு படிநிலை ஒரு ஓய்வூதியம் (ஒபஒஓ) பெற முடியவில்லை
- 2.4 கோடி ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியப் பணம் பெறுவதற்கு அலுவலகத்திற்கு நடையால் நடக்க வேண்டி இருக்கிறது
- 15 கோடி பேருக்கு திறமைகள் இருந்தபோதிலும், சிறு தொழில் தொடங்குவதற்கு முடியவில்லை
- 1.2 கோடி கர்ப்பப் பெண்களுக்கு முறையான உடல்நல பராமரிப்பு பெற முடியவில்லை
- சாமானிய மக்களுக்கு உடல்நல பராமரிப்பிற்கு செலவு செய்வதன் மூலம் மேலும் சுமை கூடியுள்ளது; ஒவ்வொரு ஆண்டும் ரூ. 16,000 கோடி அதிகரித்துள்ளது
- ஒவ்வொரு ஆண்டும் தனி இரயில்வே பட்ஜெட் காரணத்தால் 10,000 கோடி பணம் வீணடிக்கப்பட்டது
- சாதாரண மக்களால் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள முடியவில்லை
- 3 லட்சம் போலி நிறுவனங்கள் இயக்கப்பட்டன



**எனவே, 2013ம் ஆண்டு வேகத்தைக் கொண்டு நாட்டின் வளர்ச்சி வேகத்தை நாம் அளவிடுவோமானால், இந்தியா மேற்கண்ட இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு இன்னும் 40 ஆண்டுகளை எடுத்திருக்கும்**

ஒரு பத்தாண்டுகளுக்கும் மேலாக (2014க்கு முன்), தங்களை ஒன்றாக பிணைக்கக்கூடிய தேசப்பற்று, தன்னலமற்ற சேவை மற்றும் வளர்ச்சி கொண்ட ஒரு சீர்த்திருத்தவாதியை எதிர்நோக்கிப்பார்த்திருந்த இந்தியா முழுவதும் உள்ள 125 கோடிக்கு மேற்பட்ட குடிமக்களுக்கு உரிய நல நடவடிக்கைகளை கொடுப்பதில் ஒரு வெற்றிடம் இருந்து வந்துள்ளது. 2014 மே மாதத்தில், இந்தியாவிற்கு ஒரு தொலைநோக்குடைய தலைவரும் மற்றும் சீர்திருத்தவாதியுமான ஸ்ரீ நரேந்திர மோடி பிரதமராக கிடைத்தார். அவர் 'அனைவரின் ஆதரவு. அனைவரின் வளர்ச்சி & அனைவரின் நம்பிக்கை" ("Sabka Saath. Sabka Vikas&Sabka Vishwas") என்ற தனது தொலைநோக்கு ஆற்றலை, அரசியல் மதிநுட்பத்தை தொடர்ந்து செலுத்திவருகிறார்.

## கோவிட்-19 தொற்று பரவலிலிருந்து உயிர்ப்புடன் மீண்டெழும் நம் பாரத தேசம்

### பின்னணி

கோவிட்–19 தொற்றுப் பரவல் ஒட்டுமொத்த உலக சுகாதார பராமரிப்பு அமைப்பையும் பரிசோதித்தது, உலக பொருளாதாரத்தையும் & இந்த பெரிய அளவிலான தொற்று பரவலிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்குரிய ஒவ்வொரு தேசத்தின் அணுகுமுறையையும் சீர்குலைக்கச் செய்தது.

உலகின் 2வது மிகப்பெரிய மக்கள்தொகை கொண்டதும், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுமான பாரதம் 28 மாநிலங்கள் & 8 யூனியன் பிரதேசங்கள் கொண்டுள்ளது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒரு பெருமைமிகு தேசம், அத்தகைய அவசரநிலையிலிருந்து உயிர்த்தெழுவதற்குரிய தனது பலம் மற்றும் திறன் குறித்து, உயர நிமிர்ந்து நின்று ஒட்டுமொத்த உலகிற்கே எடுத்துக்காட்டியது.

முதல்முறையாக, வளர்ந்த நாடுகள் பாரதத்திடமிருந்து 'அவசரநிலை நெருக்கடி மேலாண்மை" குறித்த புதிய பொருள்வரையறையை கற்றுக்கொண்டன. இத்தேசத்திற்கு பின்வரும் பலம் இருந்த காரணத்தினால் மட்டுமே இது நிகழ நேர்ந்தது:

**சமூக விழுமியங்களுடன் கூடிய செறிவுமிக்க கலாசாரம்**

**தேசப்பற்றுடைய மக்கள்**

**பேரார்வமுடைய "சுகாதார பராமரிப்பு வீரர்கள்"**

**மக்கள் நலன் மீது முனைப்பு கொண்ட ஒரு அரசாங்கம்**

**“தேசமே முழுமுதல்” என்ற குறிக்கோளுடன் செவ்வனே செயலாற்றும், சுயநலமற்ற பிரதமர்**

இத்தகைய கொரோனா தொற்று பரவலிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கு மாண்புமிகு மக்கள் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் தலைமையின்கீழ் மத்திய அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள், முயற்சிகள், முன் முயற்சிகள் & ஆதரவு உதவி நடவடிக்கைகளை நாம் பாஉப்போம்.

## ஆரம்ப நடவடிக்கைகள்

**மார்ச் 11:** உலக சுகாதார நிறுவனம் (WHO) கொரோனாவைரஸ் நோயை ‘உலகம் பரவும் தொற்றுநோய்” என்ற முறைப்படி வரையறை செய்து அறிவித்தது.

ஆனால், 2020 மார்ச் 11க்கு மிகவும் முன்பே உடனடி நடவடிக்கை எடுத்த உலகில் உள்ள ஒரு சில நாடுகளில் பாரதமும் ஒன்று.

| ஜனவரி 31, 2020 | பிப்ரவரி 02, 2020 | பிப்ரவரி 27, 2020 | மார்ச் 12, 2020 |
|---|---|---|---|
| ஆரம்பத்தில் கொரோனாவைரஸ் திடீரென தோன்றிய மையமான, சீனாவின், ஊகானிலிருந்து இந்தியாவிற்கு திரும்பிய 300 பாரத மாணவர்களுக்கு இந்திய ராணுவம் ஒரு தனிமைப்படுத்தும் வசதியை அமைக்கச் செய்தது | அனைத்து சீன பயணிகளுக்கும் இ–விசா வசதியை பாரத அரசு இடைக்கால ரத்து செய்தது | ஜனவரி 23ல் ஊகான் மாகாணத்தில் சீனாவின் ஊரடங்கு விதிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட பிறகு, ஊகானிலிருந்து மேலும் இந்திய குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினர்கள் மற்றும் ஜப்பானில் சுற்றுலா கப்பலில் தனிமைப்படுத்தப்பட்டு மீட்கப்பட்ட இந்திய குடிமக்கள் இந்திய விமானப் படையின் பிரத்யேக தனி விமானங்களில் புதுடெல்லி வந்தடைந்தனர் | மேலும் ஏழு தனிமைப்படுத்தப்படும் இடவசதிகள் இந்திய பாதுகாப்பு படைகளால் அமைத்துருவாக்கப்பட்டன (ஜெய்சல்மார், சூரத்கர், ஜான்சி, ஜோத்பூர், டியோலாளி, கொல்கத்தா & சென்னை) |



| மார்ச் 13, 2020 | மார்ச் 14, 2020 | மார்ச் 14, 2020 | மார்ச் 13-15, 2020 |
|---|---|---|---|
| விலையேற்றம் செய்வதை கட்டுப்படுத்துவதற்காக முககவசங்கள் மற்றும் கை கிருமிநீக்கிகள் ஜூன் 30ம் தேதிவரை அத்தியாவசியப் பொருளாக நீடிக்கும்.<br><br>கோவிட்–19–ன் நெருக்கடிகளை தனிமைப்படுத்துவதற்கு உலகில் அமெரிக்கா, சீனா, ஜப்பான் & தாய்லாந்திற்கு அடுத்தபடியாக இந்தியா 5வது நாடாக ஆனது. | தொற்று பரவலின் பாதிப்பு விளைவை குறைப்பதற்காக தனி நடவடிக்கைகளை எடுப்பதற்கு மற்றும் ஒழுங்குமுறை விதிகளை வகுத்துரைப்பதற்கு தனி அதிகாரத்தை தற்காலிகமாக கொடுக்கும் 1987ம் ஆண்டு தொற்று நோய் சட்டத்தை இந்திய அரசால் செயல்படுத்தப் படுகின்றது. | கோவிட்–19 பரவுவதை மட்டுப்படுத்துவதற்கு உள்துறை அமைச்சகத்தால் தேசிய பேரழிவு சட்டம் (2005) செயல்முறைப் படுத்தப்பட்டு, மாநிலங்களுக்கு மாநில பேரழிவு உதவி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது | வரையறுக்கப்பட்ட பிரிவுகளுக்கு தவிர தற்போதுள்ள அனைத்து விசாக்களையும் இந்திய அரசு இடைக்கால ரத்து செய்கிறது.<br><br>218 இந்திய மாணவர்கள் இத்தாலியிலிருந்து வெளியேற்றப்பட்டு இந்தோ–திபேத்திய எல்லை போலிஸில் (ITBP) தனிமைப்படுத்தப் பட்டனர். |

| மார்ச் 17, 2020 | மார்ச் 22, 2020 | மார்ச் 24, 2020 |
|---|---|---|
| மார்ச் 21ம் தேதிக்குள் 72 கொரோனாவைரஸ் மருத்துவ பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் தயாராகிவிடும் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐஊஆசு) அறிவித்தது.<br><br>இந்தியாவின் பதில் நடவடிக்கைக்கு உலக சுகாதார நிறுவனம் பாராட்டு தெரிவித்தது. | மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ‘பொது முடக்கத்திற்கு” அழைப்பு விடுத்தார். | தேசிய ஊரடங்கு எண் 1 தொடங்குகிறது (21 நாட்கள்) |

## எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**உலகிலேயே மிகவும் கண்டிப்பான ஊரடங்கு நடவடிக்கையை இந்திய அரசாங்கம் விதித்தது**

கோவிட்–19க்கு அரசாங்கங்களின் பதில் நடவடிக்கைகளை கணக்கீடு செய்யக்கூடிய 73 நாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட புள்ளிவிவர அடிப்படையில், உலகில் உள்ள மிகவும் கண்டிப்பான, கடுமையான நடவடிக்கைகளில் இந்தியாவின் நடவடிக்கையும் ஒன்று என்று ஒரு கண்காணிப்பாய்வு டிராக்கர் அடையாளம் கண்டறிந்துள்ளது. ஆகஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் அரசு பிளாவட்னிக் பள்ளியிலிருந்து ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட 'ஆக்ஸ்ஃபோஃட் கோவிட்–19 அரசு நடவடிக்கை கண்காணிப்பு சாதனம்" உலகம் முழுவதும் அரசு நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக பதிவு செய்வதற்கு வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

**"தற்சார்பு பாரதத்தை" உருவாக்கும் ஒரு குறிக்கோளுடன் பொருளாதார தொகுப்பு திட்டமாக ரூ. 20 லட்ச கோடி இந்திய ரூபாயை (புனீயில் 10ழு) இந்திய அரசு அறிவித்தது. - இது எந்த வளர்ந்துவரும் நாட்டினாலும் ஒதுக்கீடு செய்யப்பட்டவற்றில் மிகவும் அதிகமானது.**

MSME–கள், வேளாண்மை, இடம்பெயர்ந்த தொழிலாளர்கள், பாதுகாப்பு துறை, வணிக தொழில்கள் மற்றும் பிற பிரிவுகளுக்கு ஆதரவளிப்பதற்கு முக்கிய கவனம் செலுத்தப்படும்.




- **8 கோடி ஏழை பெண்களுக்கு** 3 மாதங்களுக்கு **1 இலவச எல்பிஜி சிலிண்டர்.**
- **20.3 கோடி** ஏழை பெண்களின் ஜன் தன் வங்கி கணக்குகளுக்கு நேரடியாக 3 மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் 500 ரூபாய்.
- **இடம் பெயர்ந்தவர்களுக்கு இலவச உணவுப்பொருள்** - 2020 நவம்பர் வரை ஒரு நபருக்கு 5 கிலோகிராம் கோதுமை அல்லது அரிசி, ஒரு குடும்பத்திற்கு ஃ மாதத்திற்கு 1 கிலோகிராம் பருப்பு.
- **6 மாதங்களுக்கு** கடன் கெடு காலம் நீட்டிப்பு

- வருமான வரி அறிக்கை சமர்ப்பிப்பு தேதி 2020 நவம்பர் 30 வரை நீட்டிப்பு
- 2021, மார்ச் 31க்கான **சம்பளம் சாராத** வரி செலுத்துபவர்களுக்கு வரி மூலத்தில் கழிக்கப்படும் வீதத்தை **25%** அரசு குறைத்துள்ளது.
- பணியாளர்கள் மற்றும் வேலைதருநர்களுக்கு அதிக பணப்புழக்கத்தை அனுமதிப்பதற்காக பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி பங்களிப்பு வீதம் **12%** லிருந்து **10%**ற்கு குறைப்பு.
- அனைத்து EPF நிறுவனங்களுக்கு **ரூ.2,500 கோடி** EPF ஆதரவாக பணப்புழக்க நிவாரணம். மேலும் ஒரு 3 மாதங்களுக்கு (ஆகஸ்ட் வரை) நீகு பங்களிப்பு அரசாங்கத்தால் செலுத்தப்படும். இது 72 லட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு பயனளிக்கும்.
- MSMEகளுக்கு **3 லட்சம் கோடி ரூபாய்** ஈட்டுக்காப்பு இல்லா கடன் – 45 லட்சம் யூனிட்களுக்கு வேலையை மீண்டும் தொடங்குவதற்கு மற்றும் வேலைகளை காப்பதற்கு உதவும் ஒரு நடவடிக்கை.
- MSMEகளின் புதிய வரையறை
- (குறு – 1 கோடி வரை முதலீடு, 5 கோடி வரை விற்றுமுதல். சிறு – 10 கோடி வரை முதலீடு, 50 கோடி வரை விற்றுமுதல். நடுத்தரம் – 20 கோடி வரை முதலீடு)
- **உள்ளூர் தொழில்கள் ஃ பிராண்ட்களை ஊக்குவிக்கும் வகையில்** அரசு ஒப்பந்தங்களுக்கு **& 200 கோடி** வரை உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் விடுவதற்கு அனுமதியில்லை.
- **முத்ரா ஷிஷு கடன்**

  **ரூ. 50,000** வரை கடன்கள் வாங்கியுள்ளவர்களுக்கு, இந்திய ரிசர்வ் வங்கியால் நீட்டிக்கப்பட்ட கெடு காலஅளவு முடிவுற்ற பிறகு **அடுத்த 12 மாதங்களுக்கு 2%** கொண்ட ஒரு வட்டி உதவித் தொகையளித்தல். மூன்று கோடி பேர் ரூ. 1500 கோடி பயன் பெறுவார்கள்.
- **தெரு வியாபாரி - ரூ. 5,000** கோடி கடன் வசதி பெறுவதற்குரிய தெரு வியாபாரிகளுக்கான சிறப்பு திட்டம். **ரூ. 10,000** நடப்பு மூலதனம் கொடுக்கப்படும்.
- அரசுக்கு சொந்தமான பவர் ஃபைனான்ஸ் கார்பரேஷன் மற்றும் ரூரல் எலக்ட்ரிஃபிகேஷன் கார்பரேஷனிடமிருந்து பெறுபவைகளின் பேரில் ரூ. 90,000 கோடி பணப்புழக்கத்தை **மின் வினியோக நிறுவனங்கள்** பெறும். இது மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு கொடுபட வேண்டியவற்றை செலுத்துவதற்கு இந்த மின் வினியோக நிறுவனங்களுக்கு அனுமதிக்கச் செய்யும்.





- சிறு / குறு விவசாயிகளுக்கு

  சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பின் ரபி மற்றும் கரீ∴ப் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு நபார்ட் (NABARD) மூலம் **ரூ. 30,000 கோடி** கூடுதல் மூலதன அவசரநிலை நிதிகளை அரசாங்கம் வழங்குகிறது.

  விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக **பிரதமர் கிசான் கிரடிட் கார்டின் கீழ் (பிரதமர் விவசாய கடன் அட்டையின்கீழ்) ரூ. 2 லட்சம் கோடி** சலுகைக் கடன், இது 2.5 கோடி விவசாயிகளுக்கு பயனளிக்கச் செய்யும். கால்நடை மற்றும் மீன்வகைப் பிரிவுகளில் உள்ளவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படும்.

  பிரதமரின் கிசான் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு **ரூ. 17,986 கோடியை ஏழை விவசாயிகளுக்கு** மாற்றம் செய்துள்ளது.

  **விவசாயிகள் சமுதாயத்தினருக்கு உரங்கள்** – கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது 2020 ஏப்ரல் – ஜூனில், **111.61 மெட்ரிக்டன் (82.8%ற்கு மேற்பட்டு)** உரங்கள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

- **பழங்குடியினருக்கு - ரூ. 6,000 கோடி** மதிப்புள்ள திட்டங்கள் மாநிலங்களிலிருந்து ஊயுஆீயு நிதிகளின்கீழ் வந்துள்ளன. பழங்குடியின மக்கள் வன மேலாண்மை, வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் இதர வனம் தொடர்புடைய செயல்நடவடிக்கைகளில் வேலைவாய்ப்பு பெறுவார்கள்.

- **கல்வி பிரதமரின் மின்-வித்யா திட்டம் உடனடியாக** தொடங்கப்பட உள்ளது. 1 முதல் 12 வரை ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒரு தொலைக்காட்சி சேனல் இருக்கும். பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு என சிறப்பு மின்–உள்ளடக்கம் (e-content) இருக்கும். 2020 மே 30க்குள் ஆன்லைன் பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு முதல் 100 பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

- **மாநிலங்களுக்கு கூடுதல் ஆதாரங்கள்:2021 நிதியாண்டிற்கு 3% லிருந்து 5% வரை** மாநிலங்களின் கடன் பெறும் வரம்பை அதிகரிப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது **மாநிலங்களுக்கு ரூ. 4.28 லட்சம் கோடி** கூடுதல் ஆதாரங்களை கொடுக்கும். இது இருந்த போதிலும், மாநிலங்கள் அவற்றிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள 14% மட்டுமே கடன்பெற்றுள்ளன. 86% பயன்படுத்தப்படாமல் உள்ளது. கூடுதல் கடன்வாங்கும் வரம்பு சீர்திருத்தங்கள் தொடங்கப்படுவதுடன் இணைக்கப்பட்டுள்ளது.



## இதன் வகையில் முதல் முன்முயற்சிகள்

### தொழில்நுட்பம் பயன்படுத்துதல




ஏப்ரல் 2: கோவிட்–19 தொற்றுகளை மிகவும் துல்லியமாகவும் மற்றும் பயனுறவும் மக்கள் கண்காணிப்பதற்கு உதவுவதற்காக புதிய செயலியை அரசு அறிமுகம் செய்துள்ளது. 2020 ஜூலை 8ம் தேதியில்,15.52 கோடிக்கு மேற்பட்ட இந்திய குடிமக்கள் இந்த ஆரோக்கிய சேது செயலியை பயன்படுத்துகின்றனர்.

மருத்துவ உதவி




அமெரிக்கா உள்ளிட்ட கொரோனாவைரஸால் பாதிக்கப்பட்ட 55 நாடுகளுக்கு ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் என்ற மலேரியா எதிர்ப்பு மருந்தை இந்தியா வழங்கியது.

இந்த மருந்தை அண்டையிலுள்ள ஆப்கானிஸ்தான், பூட்டான், வங்கதேசம், நேபாளம், மாலத்தீவுகள், மொரீஷயஸ், இலங்கை மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுக்கும் இந்தியா அனுப்பி வைத்தது.

பிலிப்பைன்ஸ், ரஷ்யா, ஸ்லோவேனியா, தென்னாப்பிரிக்கா, இலங்கை, தான்சானியா, ஐக்கிய அரபு அமீரகம், உஸ்பெகிஸ்தான், உருகுவே, கொலம்பியா, அல்ஜீரியா, பஹாமாஸ், மொரீஷியஸ் மற்றும் ஐக்கிய முடியரசு (யுகே) ஆகிய நாடுகளுக்கு இந்திய மருந்துகள் வினியோகம் செய்தது.

இந்திய குடிமக்களை தாய் நாட்டிற்கு திரும்ப அழைத்து வருதல்



வந்தே பாரத் மிஷன் – உலகின் மிகப்பெரிய வெளியேற்றப் பணி மூலம் 30க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 10 லட்ச இந்திய குடிமக்கள் தாய்நாட்டிற்கு திரும்ப அழைத்துவரப்பட்டனர். இந்தப் பணியின்கீழ் 17,000 பேர் விமானம் மூலம் நாட்டைவிட்டு வெளியே அனுப்பிவைக்கப்பட்டனர்.

## இடம்பெயர்ந்தவர்கள் வீடு சென்றடைய உதவுதல்



இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் வீடு சென்றடைவதற்கு ஷ்ராமிக் ரயில் வண்டிகள் உதவுகின்றன– நாட்டிற்குள் தன் சொந்த குடிமகனுக்கான உலகின் மிகப்பெரிய இடமாற்றப் பணி

கட்டம் I – இடம்பெயர்ந்த 35 லட்சம் பேர் தங்கள் வீடு திரும்பினர்

கட்டம் I – இடம்பெயர்ந்த 36 லட்சம் பேரை திருப்பி அனுப்ப 2600 சிறப்பு ரயில்கள்

## கோவிட்-19 சிகிச்சை மையமாக ரயில் பெட்டிகள்



இதன்வகையில் உலகிலேயே முதல் முறையாக இந்திய ரயில்வே தனது ரயில் பெட்டிகளை கோவிட்–19 சிகிச்சை மையமாக மாற்றியது.


**5231 ரயில்வேயின் ரயில்பெட்டிகள் 23 மாநிலங்களுக்கு உதவிபுரிகின்றன.**

## இந்தியா தனிநபர் பாதுகாப்பு சாதனத்தை (PPE) உற்பத்தி செய்கிறது



ஒரே நாளில் பூஜ்யத்திலிருந்து 2 லட்சம; PPE. உலகிலேயே PPE உற்பத்தியில் இந்தியா ஒரு சாதனை படைத்திருக்கிறது.

இந்தியாவின் கோவிட்–19 பாதிப்பில் இறப்பு வீதம் (ஊகுசு) உலகிலேயே மிகவும் குறைவாகும்.



## மாநில அரசுகளுக்கு உதவிபுரிதல்:

அனைத்து மாநிலங்களுக்கும் இலவச வினியோகம்










| | | | |
|---|---|---|---|
| **2.02 கோடி N 95 முக்கவசங்கள்** | **1.18 கோடி PPE 11,300** | **6.12 கோடி HCQ வென்டிலேட்டர்கள்** | **மாத்திரைகள** |

## வரிசெலுத்துபவர்களுக்கு உதவிபுரிதல்:

2020 ஏப்ரல் முதற்கொண்டு **20 லட்சம் வரி செலுத்துபவர்கள்** பயனடையும் வகையில் ரூ. 62,321 கோடி இந்திய ரூபாயை வருமான வரித்துறை திருப்பி கொடுத்திருக்கிறது.

# சீர்திருத்தங்களின் மூலம் ஆக்கப்பூர்வ மாற்றமும், முன்னேற்றமும்

| மக்களுக்கு திறனதிகாரம் அளித்தல் | செயல் திட்டங்கள் |
|---|---|
| **பெண்களுக்கு திறனதிகாரமளிக்கும் செயல்திட்டங்கள்** | ● கர்ப்பிணி பெண்களுக்கு இலவச பரிசோதனை<br>● கர்ப்பிணி பெண்களின் உடல்நல பராமரிப்பு<br>● தூய்மை இந்தியா<br>● முத்ரா<br>● உஜ்வாலா<br>● அனைவருக்கும் வீட்டுவசதி<br>● ஸ்டேன்டுஅப் இந்தியா<br>● அனைத்து வீடுகளுக்கும் குழாய்மூலம் குடிநீர் |
| **விவசாயிகளுக்கு திறனதிகாரமளிக்கும் செயல்திட்டங்கள்** | ● பயிர் காப்பீடு<br>● மண் ஆரோக்கிய அட்டை<br>● ஆன்லைன் வேளாண் சந்தையாக்கல் (நயேுஆ)<br>● விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி<br>● விளைபொருட்களுக்கு அதிகபட்ச ஆதரவு விலை (MSP)<br>● மீன்வளத்திற்கான நீலப்புரட்சி<br>● விவசாயிகளுக்கான நிதிசார் ஆதரவு<br>● விவசாயம் சார்ந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்கள்<br>● ஓய்வுநிதி திட்டம் |
| **இளைஞர்களுக்கு திறனதிகாரமளிக்கும் செயல்திட்டங்கள்** | ● திறன் இந்தியா<br>● ஸ்டார்ட்அப் இந்தியா<br>● அடல் புத்தாக்க செயல்திட்டம் (யுஜஆ)<br>● விளையாடு இந்தியா<br>● புதிய தேசிய கல்வி கொள்கை<br>● iDEX (பாதுகாப்பு துறையில் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள்) |
| **சுகாதார பராமரிப்பு சேவைகள்** | ● ஆயுஸ்மான் பாரத் (உடல்நல காப்பீடு)<br>● சுரக்ஷா பீமா & ஜீவன் ஜோதி பீமா (ஆயுள் & விபத்து காப்பீடு)<br>● இலவச டயாலிசிஸ் சிகிச்சை<br>● இதயவால்வு ஸ்டென்ட் & முழங்கால் மூட்டு அறுவைசிகிச்சை<br>● எளிய விலை மருந்தகங்கள் (ஜன் ஆஷாதி) |





| தேசத்தின் வளர்ச்சி | செயல் திட்டங்கள் |
|---|---|
| **ஜிஎஸ்டி (GST)** | • ஜிஎஸ்டி என்பது, “ஒரு தேசத்திற்கு ஒரு வரி அமைப்பு” முறையாகும்;சாமான்ய மக்கள் (நுகர்வோர்) மீது கூடுதல் வரிச்சுமையை நீக்குகிறது;திறன்மிக்க வரிவசூல், ஊழல் வாய்ப்புகளை குறைத்தல், மாநிலங்களுக்கிடையே சரக்குகள் போக்குவரத்தை எளிதாக்குதல், ஆகிய பலன்களை இது வழங்குகிறது |
| **பணமதிப்பு நீக்கல்** | • ஊழலுக்கும், கருப்பு பணத்திற்கும் அறுதியான முற்றுப்புள்ளி<br>• 3 இலட்சம் போலி நிறுவனங்கள் அகற்றப்பட்டன<br>• எளிய வட்டிவிகிதங்களில் சாமான்ய நபர்களுக்கு கடன்வசதி<br>• பயங்கரவாதம் மற்றும் நக்ஸல் வன்முறைக்கு மரணஅடி<br>• முறையாக வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரிப்பு (வருமானவரி கணக்கு தாக்கல் 2014–ல் 3.8 கோடி என்று இருந்தது, 6.86 கோடியாக உயர்வு) |
| **டிஜிட்டல் இந்தியா** | • அரசின் சேவைகள், மானியங்கள் மற்றும் நிதியுதவி பலன்களை ஏழைகளும், சாமான்யர்களும் நேரடியாக பெறும் வசதி<br>• ஐநா சங்கத்தின் மின்–ஆளுகை பட்டியல் இந்தியாவை தரவரிசையில் 96–வது இடத்தில் வரிசைப்படுத்தியிருக்கிறது. 2012–ல், 124–வது இடத்தில் இருந்த இந்தியா, 28 இடங்கள் இப்போது முன்னேற்றம் கண்டிருக்கிறது.<br>• ஆதார் – டிஜிட்டல் அடையாளச் சான்று மற்றும் சிறந்த ஆளுகை – 121 கோடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது (2013–ல் 61 கோடியாக இருந்தது)<br>• டிஜிட்டல் லைஃப் சான்றிதழ் வழியாக 2.4 கோடி மூத்த குடிமக்கள் (ஜனவரி 2019), ஓய்வூதியர்கள் பலனடைந்துள்ளனர்;ஓய்வூதியத்தொகையைப் பெறுவதற்கு நேரடியாக செல்வதில் உள்ள சிரமம் இதனால் தவிர்க்கப்பட்டுள்ளது |



| தேசத்தின் வளர்ச்சி | செயல் திட்டங்கள் |
|---|---|
| **ஊரக வளர்ச்சி** | ● 11 கோடிக்கும் அதிகமான கிராமப்புற மக்கள், 100 நாட்கள் உத்தரவாத வேலைவாய்ப்பு திட்டத்தால் பலனடைந்துள்ளனர்.<br>● அனைவருக்கும்<br>● "கிராமப்புறங்களில் அனைவருக்கும் வீட்டுவசதி",திட்டத்தின் கீழ் 91 இலட்சத்திற்கும் அதிகமான வீடுகள் கட்ட ஒப்புதல்.<br>● ஊரக திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களைச் சேர்ந்த 5.54 இலட்சம் நபர்களுக்கு பயிற்சியளிப்பு<br>● ஊரகப் பகுதிகளில் 1.93 இலட்சம் கி.மீ. தூரத்திற்கு சாலையமைப்பு பணி நிறைவு (2014–ல் ஒரு நாளுக்கு 69 கி.மீ. என்பதோடு ஒப்பிடுகையில், இப்போது அது 134 கி.மீட்டராக உயர்த்தப்பட்டிருக்கிறது)<br>● 18600கிராமங்களுக்கு மின்வசதி தரப்பட்டிருக்கிறது. |
| **ஆறுகள் மற்றும் நீர்வழிகள் (சாகர்மாலா)** | ● 8 இலட்சம் கோடிக்கும் அதிகமான முதலீட்டில் 500 புதிய செயல்திட்டங்கள்<br>● 30 ஆண்டுகளில் 5 நீர்வழிகளில் பணிகள் என்பதோடு ஒப்பிடுகையில், 4 ஆண்டுகளில் 106 நீர்வழிகளில் பணி நிறைவு<br>● இத்திட்டத்தின் கீழ் 1 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கம்.<br>● கடலோர சமூக மேம்பாடு – ஏழை மீனவர்களுக்காக 11 மீன்பிடிப்பு துறைமுக திட்டங்கள் (ரூ.922 கோடி முதலீட்டில்) & திறன் மேம்பாட்டிற்காக 21 கடலோர மாவட்டங்களில் திட்டம் (இதுவரை 3000 நபர்கள் பலனடைந்துள்ளனர்). |
| **ஸ்மார்ட் சிட்டி (பொலிவுறு நகர) செயல்திட்டம்** | ● 10 கோடி மக்களுக்கு பயனளிக்கிறவாறு ரூ. 2,03,172 கோடி திட்ட மதிப்பில் நகரங்களை உருமாற்றம் செய்வதற்கு இந்தியாவெங்கும் 100 நகரங்கள் அடையாளம் காணப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. |





| செயல் திட்டங்கள் | மோடி அரசினால் இத்திட்டங்கள் வழியாக சேமிக்கப்பட்ட பணம் |
|---|---|
| நேரடி ஆதாயப்பலன் மாற்றுகை | 385 செயல்திட்டங்கள் & 1,70,377கோடி சேமிப்பு |
| கடனை திருப்பிச்செலுத்த இயலாத நிலை மற்றும் திவால் நிலைக்கான விதி தொகுப்பு (ஐடீஊ) | முன்கூட்டியே மூடப்படுவதிலிருந்து 160 நிறுவனங்களும் மற்றும் ₹ 1,10,000கோடிகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. |
| போலி ∴ நகல் ரேஷன் கார்டுகள் நீக்கம் | ₹ 17,000 கோடி சேமிப்பு (ஆண்டுக்கு) |
| உடல்நல பராமரிப்பிற்கான அனாவசிய செலவுகள் குறைப்பு | ₹ 16,000 கோடி சேமிப்பு (ஆண்டுக்கு) |
| எல்இடி மின் விளக்குகள் | ₹ 50,000கோடி மதிப்புள்ள மின்சாரம் சேமிப்பு |
| பினாமி சொத்து சட்டம் | ₹ 5,000கோடி ரூபாய் மீட்பு |

## சிறப்பம்சங்கள் (மோடி 2.0)

- கார்ப்பரேட் வரிகள் குறைப்பு
- பொதுத்துறை வங்கிகள் இணைப்பு
- 370 மற்றும் 35யு ஷரத்துகள் நீக்கம்
- இஸ்லாமிய பெண்கள் திறனதிகாரம் பெற முத்தலாக் தடை சட்டமாக இயற்றப்பட்டது
- குடியுரிமை திருத்தச் சட்டம்
- அயோத்திய – ராம் ஜென்மபூமி மீது உச்சநீதி மன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு
- பாதுகாப்பு சார்ந்த உற்பத்தி நிறுவனங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடு அளவு 49மூ–லிருந்து, 74மூ ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது
- இறக்குமதி செய்வதிலிருந்து 101 பாதுகாப்பு சாதனங்களுக்கு தடைவிதிப்பு
- ISRO (இந்திய விண்வெளி நிறுவனம்)–ன் வசதிகளையும் மற்றும் பிற ஆதாரவளங்களையும் பயன்படுத்தி தங்கள் திறனளவை அதிகரிக்க தனியார் துறைக்கு அனுமதி.
- முப்படைகளுக்கும் முதன்மை தளபதி பதவி (CDS) உருவாக்கம்

# இந்தியாவின் சர்வதேச தலைவர்



# 7. இந்தியாவின் சர்வதேச தலைவர்

அன்னை இந்தியா – பல மாபெரும் சமயங்கள், நம்பிக்கைகள், செழுமையான கலாச்சாரம் மற்றும் உலகிற்கு வழிகாட்டிய உன்னத தலைவர்கள் ஆகியோரின் உருவாக்கத்திற்கு வழிவகுக்க தொன்மையான நாகரீகங்களுள் ஒன்றை கொண்டிருக்கும் பெருமைமிகு தேசமிது. 2014 மே மாதத்திற்கு முன்புவரை உலக அரங்கில் இந்தியாவின் மீதான கண்ணோட்டமானது, ஊழல்களை,தலைமைத்துவ திறனின்மை, மெதுவான முன்னேற்றம், குறைவான முதலீடு, தேச வளர்ச்சி மீது தொலைநோக்கு பார்வையின்மை, உள்நாட்டு தொழில் வளர்ச்சியின் மீது உறுதியான செயல்உத்தி இல்லாத நிலை, அண்டை நாடுகளோடு பலவீனமான உறவுகள் மற்றும வளர்ச்சியடைந்த நாடுகள் மத்தியில் மதிப்பின்மை என பல்வேறு பிரச்சனைகளினால் மிக மோசமாகவே இருந்து வந்தது.

யுஎஸ்ஏ, சீனா, ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற வளர்ச்சியடைந்த ஒரு நாடாகவும் மற்றும் ஆசியாவில் சக்தி வாய்ந்த தேசமாக இந்தியா உருவாகவும் பல அம்சங்கள் அவசியமாக மற்றும் உடனடியாக முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இருந்தது. உயிரோட்டமுள்ள பொருளாதார சூழல், முதலீடை வரவேற்கும் தோழமையுள்ள வளர்ச்சியடைந்த முக்கிய நாடுகள் மற்றும் அண்டை நாடுகளுடன் வலுவான உறவு பிணைப்பு, நம்பிக்கை உருவாக்கம் மேம்படுத்தப்பட்ட நல்லுறவு ஆகியவை இவற்றுள் முக்கியமானவையாகும்.

ஸ்ரீ நரேந்திர மோடி –தனது இரத்தத்தில் தேச பக்தியையும், இதயத்தில் நாட்டின் முன்னேற்றம் மீதான பொறுப்புறுதி மற்றும் அர்ப்பணிப்பைக் கொண்ட ஒரு மிகச்சிறந்த தலைவராக, மக்களின் பிரதமராக திகழ்கிறார். “இந்தியாவின் முன்னேற்றமே”அவரது ஒரே தொலைநோக்கு திட்டமாக இருக்கிறது. உலக வரைபடத்தில் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உயர்த்துவது அவரது தீராத தாகமாக இருக்கிறது. இந்தியாவின் மக்கள்தொகையில் ஏறக்குறைய 65சூ நபர்கள் 35 வயதிற்கும் குறைந்த இளைய தலைமுறையினர். இதை கருத்தில் கொண்டு, மேம்பாடு, வேலைவாய்ப்பு, திறனதிகாரம் பெறச்செய்தல் மற்றும் சுயவேலை வாய்ப்பு ஆகியவற்றில் இந்திய இளைய தலைமுறையினரின் கனவுகளை நிஜமாக்குவதற்காக நமது பிரதமர், உலகின் வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்து வரும் தேசங்கள் பலவற்றில், “வளர்ச்சிக்கான பயணங்களை”மேற்கொண்டார்.

மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் மக்கள் நலன் மீது கூர்நோக்கம் செலுத்தும் ஆளுகை மற்றும் நிர்வாகத்தினால் நமது தாய் இந்தியாவின் பெருமை மீண்டும் வலுவாக நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது;வெளிநாடுகளில் வசிக்கும் ஒவ்வொரு இந்தியரும் பெருமை மற்றும் மதிப்பின் உணர்வை இதனால் உணரச் செய்திருக்கிறது. இந்திய மக்களின் பங்களிப்பையும், இந்தியாவின் தொலைநோக்கு திட்டத்தையும் உலகின் பெரும்பான்மையான நாடுகள் மதிக்கத் தொடங்கின. நமது மிகச்சிறந்த, மக்களின் பிரதமரது தலைமையின் கீழ் இந்தியாவில் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கத் தொடங்கின. உலகை வாட்டும் மிக மோசமான பொருளாதார தளர்வு





சூழல்களையும் மீறி, இந்தியாவின் பொருளாதார திறன் மீது உலக நாடுகள் பொறாமை கொள்ளும் அளவிற்கு தொடர்ச்சியான வளர்ச்சி எட்டப்பட்டது. "ஊழல்"என்பதே அரசு நிர்வாகத்தில் முற்றிலுமாக இல்லாதவாறு அளிக்கப்பட்டது. சீனா மற்றும் யுஎஸ்ஏ நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி "வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகமாக செய்யப்படும் அமைவிடங்கள்"பட்டியலில் தரவரிசையில் இந்தியா முதல் இடத்தைப் பிடித்தது. மேக் இன் இந்தியா, ஸ்டார்ட்அப் இந்தியா, முத்ரா போன்ற திட்டங்கள் வழியாக உள்நாட்டு உற்பத்தி மற்றும் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்கமும், உத்வேகமும் தரப்பட்டது.

நாட்டின் முன்னேற்றம் மற்றும் நாட்டு மக்களின் நலனுக்காக பிரதமர் எடுத்திருக்கும் அனைத்து முயற்சிகளும் மாநில அரசுகளாலும், மாண்புமிகு மத்திய அமைச்சர்களாலும் மற்றும் சாமான்ய மக்களாலும் உறுதியான ஆதரவையும், வரவேற்பையும் பெற்றன. "இந்தியாவின் முன்னேற்றம்"என்ற ஒற்றை குறிக்கோளை நோக்கி அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றி வருகின்ற இந்த தேசத்தின் வலுவான தூண்களாக இவர்களும் மற்றும் ஒட்டுமொத்த தேசமுமே இருக்கிறது.

பெருமைமிகு இந்தியத்தாயின் ஒரு தவப்புதல்வனாக நமது மாண்புமிகு ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 59 நாடுகளுக்கு இதுவரை பயணம் மேற்கொண்டிருக்கிறார். பிரதமரின் வார்த்தைகளை கவனமாக செவிமடுத்து, மரியாதை வழங்கி, இந்தியாவின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு இந்த நாடுகள் ஒவ்வொன்றும் ஆதரவளிப்பதை அவரது பயணங்கள் உதவி செய்தன. ஒரு பயண திட்டத்தில் பெரும்பாலும் 2–3 நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கும் நமது பிரதமர், நேர விரயத்தை தவிர்ப்பதற்காக இரவு நேரங்களில் பயணத்தை மேற்கொண்டு, பயனுள்ள விஜயங்களாக இவைகள் இருப்பதை உறுதி செய்திருக்கிறார்.

## வெளிநாட்டு கொள்கையின் முக்கிய அம்சங்களும், முன்னுரிமைகளும்:

- நமது தேசத்தோடு எல்லைகளைக் கொண்டிருக்கின்ற மற்றும் அருகில் இருக்கின்ற நாடுகளோடு உறவுகளை மேம்படுத்துவது
- நம்நாட்டின் ஒவ்வொரு மாநிலமும் மற்றும் நகரமும், பிற நாடுகள், மாநிலங்கள் அல்லது நகரங்களோடு உறவு பிணைப்பை ஏற்படுத்த சுதந்திரம் வழங்கப்படும்
- இருதரப்பு வர்த்தகமே இந்த உறவுகளில் முதன்மையாக ஆதிக்கம் செலுத்தும்
- ஆக்ட் ஈஸ்ட், கிழக்காசியா, தெற்காசியா, மேற்காசியா, அண்டை நாடுகளுக்கு முதன்மை முன்னுரிமை, இந்தியப் பெருங்கடல் நாடுகளோடு நல்லுறவுக்கான அவுட்ரீச் கொள்கைகள்
- வட மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா, யுரேஷியா மற்றும் ஆப்ரிக்கா நாடுகளோடு நல்லுறவை மேம்படுத்தல்.





## முதன்மை சாதனைகள்:

இந்திய வரலாற்றில் முதன்முறையாக, நரேந்திர மோடி அரசின் தன்முனைப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்லுறவு செயல்பாடுகளின் மூலம் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

- நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக உலகெங்கும் இருந்து வலுவான ஒத்–துழைப்பை கொண்டு வருவதற்காக 59 வளர்ச்சியடைந்த மற்றும் நாடுகளுக்கு பிரதமர் மோடி விஜயம் செய்திருக்கிறார்.
- உலகளவில் 5வது மிகப்பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா (2019 ஆம் ஆண்டில்) உருவெடுத்தது.
- பிரதமர் மோடி அவர்களின் யோசனையை ஏற்று உறுப்பினர்களாக 121 நாடுகள் பங்கேற்புடன் இன்டர்நேஷனல் சோலார் அலையன்ஸ் அமைப்பு முதல் முறையாக உருவாக்கப்பட்டது. இந்தியாவில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் இந்த அமைப்பானது, மாற்று எரிசக்தியாக சூரியஒளி மின்சக்தியை முன்னிலைப்படுத்தும்.
- ஏவுகணை தொழில்நுட்ப கட்டுப்பாடு நிர்வாக அமைப்பில் (ஆவுஊசு)இந்தியா இணைந்தது. இதன்மூலம் முக்கியமான ஏவுகணை தொழில்நுட்பத்திற்கான அனுகுவசதியை பெற்றிருக்கிறது.
- ஆசியாவில் இந்தியாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை அங்கீகரிக்கும் வகையில், பசிபிக் பிராந்திய தலைமை என்பதை இந்தோ–பசிபிக் பிராந்திய தலைமை என முதன்முறையாக யுஎஸ். ராணுவம் பெயர் மாற்றம் செய்திருக்கிறது.
- உலகளாவிய புத்தாக்க அட்டவணை தரவரிசையில் இந்தியா கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கிறது (2015–ல் 81வது இடத்திலிருந்து, 2020–ல் 48–வது இடத்திற்கு முன்னேற்றம்).
- இஸ்ரேல், தொலைதூர கிழக்கு ரஷ்யா பிராந்தியம், பாலஸ்தீனம், மங்கோலியா ஆகிய நாடுகள் பயணம் மேற்கொண்ட முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையை மோடி ஜி பெற்றிருக்கிறார்.
- இந்திய அரசின் உதவி அவசியமாக இருந்த வெளிநாடுகளில் வசித்த 2,03,000இந்தியர்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.
- வந்தே பாரத் மிஷன் (கோவிட்–19) திட்டத்தின் வழியாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 10 இலட்சத்திற்கும் அதிகமான இந்தியர்கள் நம் நாட்டிற்குத் திரும்ப வசதி செய்யப்பட்டது.
- வரலாற்றில் முதன்முறையாக, 186 நாடுகள் தான் வெளியுறவு அமைச்சக அளவில் வலுவான நல்லுறவு நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

- பிரதமரின் வலுவான வெளிநாட்டு ஒத்துழைப்பு நடவடிக்கைகளினாலும், அதிக ஏற்றுமதியினாலும் நமது நாட்டின் வெளிநாட்டு அன்னியச் செலாவணி இருப்புகூ451பில்லியன் ருளுனுஎன உயர்ந்தது.
- ஒவ்வொரு இந்தியனின் மரியாதையும், பெருமையும் மீண்டும் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளன.
- பிரதமரின் வெளிநாட்டு பயணங்கள் 150 பில்லியன் ருளுனு நிதி முதலீடு இந்தியாவிற்கு வருவதை ஏதுவாக்கியுள்ளன.
- 400 மில்லியன் இந்தியர்களுக்கு பயிற்சியளிக்க வளர்ச்சியடைந்த நாடுகளோடு கூட்டாண்மை செயல்பாடு.
- நகர்ப்புறம் சார்ந்த பெருநகரங்களை உருமாற்றம் செய்து மேம்படுத்த வளர்ந்த நாடுகளோடு கூட்டாண்மை
- உள்நாட்டு போரால் புலம்பெயர்ந்த ஸ்ரீலங்க தமிழ் குடும்பங்களுக்காக 50,000 புதிய வீடுகள் கட்டப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திற்கு நேரில் சென்ற முதல் பிரதமர் மோடி அவர்களே.

## முக்கிய அங்கீகாரம்:

வரலாற்றில் முதன் முறையாக உலகின் பல நாடுகள், குறிப்பாக இஸ்லாமிய நாடுகள், இந்திய பிரதமர் எடுத்திருக்கும் சிறப்பான முன்னேற்ற முனைப்புத் திட்டங்களுக்காக மனமார்ந்த பாராட்டுகளையும், அங்கீகரிப்பு கௌரவத்தையும் வழங்கின.

| விருது | விவரங்கள் |
|---|---|
| **கிங் ஹமாத் ஆர்டர் ஆஃப் தி ரினாய்சன்ஸ்** | இந்தியாவிற்கும் பஹ்ரைன் நாட்டுக்குமிடையே இருதரப்பு உறவுகளை வலுவாக்கியதற்கான விருது |
| **ஆர்டர் ஆஃப் ஜையத்** | அரசர்கள், அதிபர்கள் மற்றும் பிரதமர்களுக்கு யுஏஇ ஆல் வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாக ஜையத் மெடல் |
| **ஆர்டர் ஆஃப் செயிண்ட் ஆண்ட்ரூ தி அபோஸ்டில்** | ஆர்டர் ஆ.:.ப் செயிண்ட் ஆண்ட்ரூ தி அபோஸ்டில் என்பது, ரஷ்ய அரசு வழங்கும் மிக உயர்ந்த மற்றும் மிக தொன்மையான விருதாகும். |
| **பிலிப் கோட்லெர் பிரசிடென்ஷியல் அவார்டு** | தேசத்திற்காக மகத்தான தலைமைத்துவ பண்பிற்காக வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| **சியோல் அமைதி பரிசு 2018** | இந்திய மற்றும் உலக பொருளாதார வளர்ச்சிக்காக மோடியின் பங்களிப்பை இது அங்கீகரித்தது;பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்குமிடையே உள்ள சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கான ‘மோடிநாமிக்ஸ்’ செயல்படுத்தியதற்கான கௌரவமாக இது வழங்கப்பட்டது. |
| **யுஎன் சேம்பியன்ஸ் ஆஃப் தி எர்த் அவார்டு 2018** | சுற்றுச்சூழல் நலன் மீதான நடவடிக்கையில் புதிய அளவில் ஒத்துழைப்புகளை முன்னெடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சங்கம் வழங்கிய ஒரு மிக உயர்ந்த சுற்றுச்சூழல் விருது. |
| **கிராண்டு காலர் அஃப் தி ஸ்டேட் ஆஃப் பாலஸ்தீன்** | ஒத்துழைப்பிற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கும் வெளிநாட்டு தலைவர்களை கௌரவிப்பதற்காக பாலஸ்தீன் அரசாங்கத்தால் வழங்கப்படும் மிக உயர்ந்த விருது இது. |
| **அமிர் அப்துல்லா கான் அவார்டு** | ஆ∴ப்கானிஸ்தான் நாட்டால் வழங்கப்படும் மிக உயர்ந்த சிவிலியன் விருது இதுவே. |
| **கிங் அப்துல்அஜிஸ் சாஷ் அவார்டு** | சவுதி அரேபியாவின் மன்னர் ‘கிங் சல்மான் பின் அப்துல் அஜிஸ்’ அவர்களால், அந்நாட்டின் மிக உயர்ந்த சிவிலியன் விருதான இது நமது பிரதமருக்கு வழங்கப்பட்டது. |
| **தி டிஸ்டின்கியூஸ்டு ரூல் ஆஃப் நிஸான் இஜ/தீன்** | சர்வதேச ஒத்துழைப்பை அங்கீகரிக்கும் வகையில் ‘மாலத்தீவுகள்’ அரசின் மிக உயர்ந்த விருது. |
| **குளோபல் கோல்கீப்பர் அவார்டு** | தூய்மை இந்தியா திட்டத்திற்காக பில்கேட்ஸ் மற்றும் மெலிண்டா அறக்கட்டளையால் இவ்விருது வழங்கப்பட்டது. |
| **டைம் இதழ் வழங்கும் 2016 ஆம் ஆண்டின் சிறந்த நபர் விருது** | மோடி ஜி அவர்களின் சர்வதேச செயல்பாடுகளுக்காக டைம்ஸ் இதழின் வாசகர்கள் மிக அதிகமான % வாக்குகளை வழங்கி கௌரவித்தனர். |





| | |
|---|---|
| **உலகில் 100 அதிக செல்வாக்குள்ள நபர்கள் விருது** | 2014, 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் டைம் இதழின் விருது பிரதமருக்கு வழங்கப்பட்டது. |
| **உலகின் மிகச்சிறந்த தலைவர்கள்** | ஃபார்ச்சூன் இதழ் நடத்திய கருத்தாய்வில் (2015) தரவரிசையில் 5வது இடம் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது. |
| **உலகின் 3-வது முதன்மையான தலைவராக தேர்வு** | 2017 ஆம் ஆண்டில் கால்அப் இன்டர்நேஷனல் அசோசியேஷன் (GIA) நடத்திய வாக்கெடுப்பில் மூன்றாவது இடம் பிரதமருக்கு வழங்கப்பட்டது. |
| **உலகின் அதிக சக்தி வாய்ந்த நபர்களுக்கான ஃ போர்ப்ஸ் பட்டியலில் பிரதமர் மோடிக்கு 9வது இடம் (2015, 2016 & 2018).** | சிறப்பான ஒத்துழைப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக சர்வதேச தளத்தில் மிக முக்கியமான நபராக நமது பிரதமர் மோடி தேர்வு. |

**முக்கிய அம்சங்கள்:**

| ஐக்கிய நாடுகள் சங்க அமைப்பு | விவரங்கள் |
|---|---|
| **ஐ.நா. சட்ட வாரியம் (சர்வதேச கடல் சர்ச்சைகள்)** | நீரு சந்திரா – யு.என். லா அமைப்பிற்கு தேர்வு செய்யப்பட்ட முதல் இந்திய பெண். |
| **என்ஜிஓ குழு (அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் குழு)** | ஐ.நாவின் பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலுக்கு ஆலோசனை வழங்கும் அந்தஸ்திற்காக விண்ணப்பிக்கும் என்ஜிஓக்களை பரிசீலனை செய்து, அவைகளுக்குப் பரிந்துரைக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய திறன் கொண்டதாக இருப்பதால் ஐ.நா. சங்கத்தின் என்ஜிஓ குழு செல்வாக்குள்ளதாக கருதப்படுகிறது. |
| **செயலாக்க வாரியம் ஐ.நா. - பெண்களின் செயலாக்க நிர்வாகக்குழு** | ஐ.நா. மேம்பாடு செயல்திட்டம் (UNDP)ஐநா மக்கள்தொகை நிதியம் (UNFPA)மற்றும் செயல்திட்ட சேவைகளுக்கான ஐ.நா. அலுவலகம் (UNOPS)ஆகியவற்றின் நிர்வாகக்குழு தேர்தல்களில் இந்தியா வெற்றி கண்டது. |



| | |
|---|---|
| **ஆணையங்கள்**<br>**மக்கள் தொகை மற்றும் மேம்பாட்டிற்கான ஐ.நா. ஆணையம்.**<br>**சமூக முன்னேற்றத்திற்கான ஆணையம் குற்றத்தடுப்பு மற்றும் குற்றவியல் நீதிக்கான ஆணையம்** | மக்கள் தொகை மற்றும் மேம்பாட்டிற்கான ஐ.நா. ஆணையம். சமூக முன்னேற்றத்திற்கான ஆணையம் குற்றத்தடுப்பு மற்றும் குற்றவியல் நீதிக்கான ஆணையம் ஆகியவற்றில் உறுப்பினராக இந்தியா தேர்வு செய்யப்பட்டது. |
| **பொருளாதார மற்றும் சமூக கவுன்சில்** | பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் விவகாரங்களில் ஒருங்கிணைப்பு, கொள்கை மீளாய்வு, கொள்கை கலந்துரையாடல் மற்றும் பரிந்துரைப்புகளுக்கான பிரதான அமைப்பில் உறுப்பினராக இந்தியா தேர்வு. |
| **ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில்** | வாக்களிக்கப்பட்ட 192–ல், 184 வாக்குகள் பெற்று இந்தியா வெற்றி. பாதுகாப்பு மற்றும் நிலைப்புத்தன்மையை உறுதிசெய்வதில் இந்த கவுன்சிலின் பணி முக்கியமானது. |
| **ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம்** | 193 வாக்குகளில் மிக உயர்ந்த எண்ணிக்கையாக 188 வாக்குகள் பெற்று இந்தியா தேர்வு. மிக முக்கியமான பங்கை இந்தியா இதில் வகிக்கும். |
| **உலக சுகாதார நிறுவனம்** | உலக சுகாதார நிறுவனத்தின் செயலாக்க நிர்வாக குழுவின் தலைவராக மத்திய அமைச்சர் டாக்டர். ஹர்ஷ் வர்தன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். |

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி – தேசத்தின் நலன் மீது தொடர்ச்சியான பொறுப்புறுதி, அர்ப்பணிப்பு மற்றும் செயல்திறன்களின் மூலம் இத்தகைய சிறப்பான சர்வதேச உறவுகள், ஒத்துழைப்பை ஏதுவாக்கி பாரத தேசத்திற்கும், மக்களுக்கும் பெருமையினை நிலைநாட்டியிருக்கும் மகத்தான தேசபக்தராகவும், ஆளுமைத்திறனுள்ள தலைவராகவும் திகழ்கிறார். நமது ஆதரவும், ஒத்துழைப்பும் அவரின் கரங்களுக்கு இன்னும் வலுசேர்க்கும்.

# முடிவுரை

**ஒரு நல்ல இதயம் நல்ல சிந்தனையை உருவாக்கும்**

**நல்ல சிந்தனைகள் சிறந்த சேவைகளை ஏதுவாக்கும்**

**சிறந்த சேவைகளோ, திறன்மிக்க நல்ல நிர்வாகத்தை வழங்கும்**

**சிறந்த ஆளுகையும், நிர்வாகமும் தேசத்தின் ஆக்கப்பூர்வ உருமாற்றத்தை சாத்தியமாக்கும்**

தேச நலனையே தனது உயிர்மூச்சாக கொண்டிருக்கும் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் மூலம் இந்த தேசம் மாபெரும் ஆற்றலைப் பெற்று உயர்நிலையை எட்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

முன்னேற்றம், முழுமையான உருமாற்றத்தை தேசத்திற்கும் மற்றும் திறன்கள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை நமது பெருமைமிகு தேசத்தின் மக்களுக்கு வழங்குவதற்கான நமது பிரதமரின் சீரிய முயற்சிகள் “சுயநிறைவுள்ள பாரதம்”என்ற கனவை நிஜமாக்கும்.

இந்த நூற்றாண்டின் மாபெரும் செயல்திட்டமான “சுய–சார்புள்ள பாரதம்”என்பதில் பொறுப்புணர்வுள்ள ஒவ்வொரு குடிமகனும் இணைவதும், உரிய பங்களிப்பை வழங்குவதும் அவசியமாகும். மக்களின் நலன் மீதே முழு கவனமும் செலுத்தும் நமது பிரதமர் மோடி அரசின் சிறப்பான முனைப்புத்திட்டங்களை புரிந்துகொண்டு மனமார்ந்த ஆதரவை வழங்குவது தேசபக்தியும், நாட்டு நலன்மீதான அக்கறையும் உள்ள குடிமக்கள் அனைவரின் கடமை என்பதை சொல்ல வேண்டியதில்லை.

அரசின் பல்வேறு முனைப்புத்திட்டங்களின் பலன்கள், மக்களுக்கு கிடைத்திருக்கும் ஆதாயங்கள், நாடு எட்டியிருக்கும் முன்னேற்றங்கள் குறித்த தகவல்களை பிறரோடு பகிர்ந்து, மக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வையும், உண்மையான தகவல் அறிவையும் பெறுவதற்கு பங்களிப்பை வழங்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் தினசரி செயல்பாடாக மிளிரட்டும்.

**மக்களின் பிரதமர்*!*... மக்கள் நலன் மீது கூர்நோக்கம் கொண்ட அரசு நிர்வாகம்*!***



# உள்ளடக்கங்கள்

நன்றியுரை....... 4

முகவுரை.......6

1. ஏழை மக்களின் ஒரு மகனாக:....... 8

2. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஒரு அக்கறையுள்ள தந்தையாக:.......12

3. இளம் தலைமுறையினருக்கான வழிகாட்டி....... 16

   புதிய கல்விக் கொள்கை (NEP)....... 18

   பணிக்கு ஆட்சேர்ப்புக்கான தேசிய முகமை (National Recruitment Agency)....... 20

   வேலையின்மைக்கான அலவன்ஸ் (கொடுப்பனவு) – அடல் பிமித் வயாக்தி கல்யான் யோஜனா....... 22

   திறன் இந்தியா – பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா (PMKVY)....... 23

   தொடக்க (ஸ்டார்ட்அப்) இந்தியா....... 25

   தேசிய தொழில்முனைவோர் விருதுகள்.......27

   விளையாட்டு (கேலோ) இந்தியா (Khelo India)....... 28

4. ஒரு தேசப்பற்றுமிக்க வீரராக....... 30

5. ஒரு அர்ப்பணிப்பு கொண்ட தொண்டராக.......37

130 கோடி
இந்தியர்களின்
எழுச்சி மந்திரமாக
உருவெடுத்துள்ளது
"சுயசார்பு பாரதம்"

